வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com    மலர் : 06    21.03.2025 வெள்ளிக்கிழமை    இதழ் : 82    பக்கங்கள் : 12




## மே 06ஆம் திகதி உள்ளூராட்சி தேர்தல்

கொழும்பு, மார்ச் 21

**உள்ளூராட்சி சபைகள் தேர்தல் எதிர்வரும் மே 06ஆம் திகதி - செவ்வாய்க்கிழமை நடைபெறும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்கா நேற்று வியாழக்கிழமை அறிவித்தார்.**

உள்ளூராட்சி சபைகளுக்கான வேட்புமனுக்கள் தாக்கல் நேற்று நண்பகல் 12 மணியுடன் நிறைவடைந்தன. 336 உள்ளூராட்சி சபைகளுக்கான வேட்புமனுக்கள் கடந்த திங்கட்கிழமை முதல் ஏற்றுக்கொள் ளப்பட்டன.

இதேவேளை, கிளிநொச்சியின் பூநகரி பிரதேச சபை உட்பட 3 உள்ளூராட்சி சபைகளுக்கான வேட்புமனுக்கள் எதிர்வரும் 27ஆம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12 மணி வரை தாக்கல் செய்ய முடியும்.

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை கடந்த 2023ஆம் ஆண்டு நடத்துவதாக இருந்தது. ஆனால், நிதி ஒதுக்கப்படாததாலும் தேர்தல் சட்ட மூலத்தில் திருத்தம் செய்யப்படவேண்டியிருந்ததாலும் திட்டமிட்டபடி தேர்தல் நடைபெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## புதிய கூட்டணியை அறிவித்தது தமிழ் தேசிய மக்கள் முன்னணி

யாழ்ப்பாணம், மார்ச் 21

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைமையிலான புதிய கூட்டணி நேற்றைய தினம் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

இந்தப் புதிய கூட்டணியில் சிறீகாந்தா - சிவாஜிலிங்கம் தலைமையிலான தமிழ்த் தேசியக் கட்சி, ஐங்கரநேசன் தலைமையிலான தமிழ்த் தேசிய பசுமை இயக்கம், சட்டத்தரணி கே.வி.தவராஜா தலைமையிலான ஜனநாயக தமிழரசு கட்சி,



தமிழ் மக்கள் கூட்டணியிலிருந்து விலகிய க. அருந்தவபாலன் ஆகியோர் இணைந்துள்ளனர்.

இந்தக் கூட்டணி தொடர்பான அறிவிப்பை வெளியிடும் செய்தியாளர் சந்திப்பு நேற்று வியாழக்கிழமை கொக்குவிலுள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைமை பணிமனையில் நடைபெற்றது.

இந்தப் புதிய கூட்டணி அகில இலங்கை தமிழ் 11



## தேசிய மக்கள் சக்தி யாழில் வேட்புமனு!

யாழ்ப்பாணம், மார்ச் 21

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 17 உள்ளூராட்சி மன்றங்களுக்கும் தேசிய மக்கள் சக்தி நேற்று வியாழக்கிழமை வேட்புமனுக்களை தாக்கல் செய்தது.

கடற்றொழில் மற்றும் நீரியல், கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தலைமையில் பாராளுமன்ற உறுப்பினர்களான க. இளங்குமரன், ஜெ.ரஜீவன், சிறீபவனந்தராஜா ஆகியோர் 11

## மிருசுவில் படுகொலையாளிக்கு உயர்நீதிமன்றம் பயணத் தடை!

கொழும்பு, மார்ச் 21

மிருசுவிலில் 8 தமிழர்களை படுகொலை செய்த குற்றத்துக்காக மரண தண்டனை விதிக்கப்பட்டு, பின்னர் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் பொது மன்னிப்பு வழங்கப்பட்ட சுனில் ரத்நாயக்கவுக்கு நேற்று வியாழக்கிழமை உயர்நீதிமன்றம் வெளிநாட்டு பயணத் தடை விதித்தது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வழங்கிய பொதுமன்னிப்புக்கு எதிராக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் நிறைவேற்று 11

## முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை யார் ஆட்சிக்கு வந்தாலும் நீதி கிட்டாது

### ஐக்கிய தேசிய கட்சி சொல்கிறது

யாழ்ப்பாணம், மார்ச் 21

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை விடயத்தில் ஆட்சிக்கு வரும் எந்தத் தலைவரிடமும் அதற்கான நீதியை எதிர்பார்க்க முடியாது. கடவுள் மட்டுமே நீதியை வழங்க முடியும் என்று ஐக்கிய தேசிய கட்சியின் யாழ்ப்பாணம் அமைப்பாளர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் கூறியுள்ளார். 11

## யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கட்சிகள் சார்ந்து 114, சுயேச்சை சார்பில் 10 வேட்புமனுக்கள் ஏற்பு

### ஐ. த. தே. கூட்டணியின் 8 வேட்புமனுக்கள் நிராகரிப்பு

- சி.சிலக்சன் -

யாழ்ப்பாணம், மார்ச் 21

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கட்சிகள் சார்ந்து 148, சுயேச்சைக் குழுக்கள் சார்ந்து 27 தேர்தலில் போட்டியிட கட்டுப்பணம் செலுத்தப்பட்டது. இதில், கட்சிகள் சார்ந்து 136 வேட்புமனுக்களும் சுயேச்சைக் குழுக்கள் சார்ந்து 23 வேட்புமனுக்களும் தாக்கல் செய்யப்பட் டன. இவற்றில் கட்சிகள் சார்பில் 11

## வேட்புமனு நிராகரிப்புக்கு எதிராக உயர்நீதிமன்றத்தை நாடவுள்ளோம்

### ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி அறிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 21

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டமைக்கு எதிராக உயர் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யவுள்ளதாக அந்தக் கட்சியின் பேச்சாளர் சுரேஷ் பிறேமசந்திரன் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் எதிர்வரும் மே 6ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதற்கான வேட்பு மனு தாக்கல் நேற்று வியாழக்கிழமையுடன் நிறைவடைந்தது. இந்த நிலையில், 11

## எமது வேட்புமனு நிராகரிக்கப்பட்டால் கஜேந்திரகுமாருக்கு வாக்களியுங்கள்!


### அர்ச்சுனா எம். பி.

யாழ்ப்பாணம், மார்ச் 21

எமது சுயேச்சை குழுவின் வேட்புமனு நிராகரிக்கப்பட்டால் நாம் போட்டியிடாத இடங்களில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் தேசிய மக்கள் முன்னணியினருக்கு வாக்களியுங்கள் என்று யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இ.அர்ச்சுனா தெரிவித்துள்ளார்.

அத்துடன், தற்போதுள்ள தமிழ்த் தலைமைகளில் விலைபோகாத தலைமை கஜேந்திரகுமார் இருக்கிறார் - என்றும் அவர் கூறியுள்ளார்.

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலுக்காக யாழ். மாவட்டத்தில் நேற்று வேட்புமனுக்களை தாக்கல் செய்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து 11



## தேசிய மக்கள் சக்தியின் வேட்புமனு தனிசிங்களத்தில்!

வவுனியா, மார்ச் 21

வவுனியாவின் 5 உள்ளூராட்சி மன்றங்களுக்குமான வேட்புமனுக்களை தேசிய மக்கள் சக்தி சிங்கள மொழியில் மட்டுமே பூரணப்படுத்தப்பட்டு கையளிக்கப்பட்டுள்ளன என்று அறிய வருகிறது.

தேசிய மக்கள் சக்தியின் இந்த செயல்பாடு தொடர்பில் கட்சிக்குள்ளேயே அதிருப்தியும் - விசனமும் வெளியிடப்பட்டுள்ளது என்றும் தெரிகிறது. (ஐ-10)

## உடன்படிக்கையில் மாற்றம்; பரவும் தகவல் தவறானது!

### அதானி நிறுவனம் அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 21

இலங்கையில் காற்றாலை மின்னுற்பத்தி கருத்திட்ட உடன்படிக்கையில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன என்று பரவும் வதந்திகளை அதானி கிறீன் எனர்ஜி நிறுவனம் திட்டவட்டமாக மறுத்துள்ளது.

ஒரு கிலோவாட் மணி நேரத்திற்கு 7 சதம் என விலையை மாற்றியமைக்க நாங்கள் முன்வந்துள்ளதாகக் கூறும் கருத்துகள் முற்றிலும் தவறானவை 11

## தென்னக்கோனுக்கு ஏப். 3 வரை மறியல்!

கொழும்பு, மார்ச் 21

முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை எதிர்வரும் ஏப்ரல் 03ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு மாத்தறை நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

2023 டிசம்பர் 13 ஆம் திகதி மாத்தறை வெலிகம பலேன பகுதியில் உள்ள ஹோட்டல் 11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வவுனியா மாவட்டத்தில்

# 103 உறுப்பினர் பதவிகளுக்கு 1,231 வேட்பாளர்கள் போட்டி!

வவுனியா, மார்ச் 21

எதிர்வரும் மே 6 ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் வவுனியா மாவட்டத்தில் 103 உறுப்பினர்களை தெரிவதற்காக ஆயிரத்து 231 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர் என்று அந்த மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர் பி. ஏ. சரத்சந்திர தெரிவித்தார்.

வேட்புமனுக்களை ஏற்கும் பணி நேற்றைய தினம் முடிவடைந்தது. இதைத் தொடர்ந்து நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், வவுனியா மாவட்டத்தில் உள்ள ஐந்து உள்ளூராட்சி மன்றங்களில் போட்டியிடவுள்ள கட்சிகள், சுயேச்சைக் குழுக்கள் மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள தேர்தல் பணிமனையில் வேட்புமனுக்களை தாக்கல் செய்துள்ளன.

இதுவரை நகர சபையாக இருந்து தரமுயர்த்தப்பட்ட வவுனியா மாநகர சபைக்கு முதலாவது தேர்தலாக இது அமைந்துள்ளது. மாநகர சபையில் மொத்தமாக 20 உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

அதற்காக, 10 அரசியல் கட்சிகளும் 2 சுயேச்சை குழுக்களும் வேட்புமனுக்களை தாக்கல் செய்திருந்தன. அவற்றில் மக்கள் போராட்ட முன்னணியின் வேட்புமனு முழுமையாக நிராகரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் ஐக்கிய தேசியக் கட்சியில் வேட்பாளர் ஒருவர் நிராகரிக்கப்பட்டுள்ளார். இதன்படி 11 தரப்புக்களின் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபைக்கு 26 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர். இதற்காக 12 அரசியல் கட்சிகளும் 4 சுயேச்சைக் குழுக்களும் வேட்புமனுக்களை தாக்கல் செய்துள்ளன. அவற்றில் ஜனநாயக தேசிய கூட்டணி, ஐக்கிய தேசிய கட்சி மற்றும் ஒரு சுயேச்சை குழுவின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. அத்துடன், 13 தரப்புக்களின் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

வெண்கல செட்டிக்குளம் பிரதேச சபைக்கு18 உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்படவுள்ளனர். இதற்காக 10அரசியல் கட்சிகளும் 2 சுயேச்சை குழுக்களும் வேட்புமனுக்களை தாக்கல் செய்துள்ளன. வேட்புமனுக்கள் எவையும் நிராகரிக்கப்படவில்லை.

வவுனியா வடக்கு பிரதேச சபையில் 23 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர். இதற்காக 9 அரசியல் கட்சிகளும் 2 சுயேச்சைக் குழுக்களும் வேட்புமனுக்களை தாக்கல் செய்துள்ளன. இரு சுயேச்சைக் குழுக்களின் வேட்புமனுக்களும் நிராகரிக்கப்பட்டுள்ளன.

வவுனியா தெற்கு சிங்களபிரதேச சபையில் 16 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர். இதற்காக 7அரசியல் கட்சிகளும் 2 சுயேச்சைக் குழுக்களும் வேட்புமனுக்களை தாக்கல் செய்துள்ள நிலையில், அனைத்தும் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

இதன்படி, வவுனியாவில் 5 உள்ளூராட்சி சபைகளில் 103 உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக ஆயிரத்து 231 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

இதேவேளை உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிடுவதற்காக 71 தரப்புகள் கட்டுப்பணம் செலுத்தியிருந்தன. இவற்றில் 11 தரப்புகள் வேட்புமனுக்களை தாக்கல் செய்யவில்லை.

வவுனியா மாவட்டத்தில் ஒரு இலட்சத்து 29 ஆயிரத்து 293 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர் - என்றார். (ஐ - 10)

நேற்றைய தினமும் யாழ்ப்பாணத்தில் பல கட்சிகள் மற்றும் சுயேச்சை குழுக்கள் வேட்பு மனுக்களை தாக்கல் செய்தன. (படங்கள் : ஐ.சிவசாந்தன்)


இலங்கை தமிழ் அரசுக் கட்சி


தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி



ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி


ஈழ மக்கள் ஜனநாயக கட்சி


அர்ச்சுனா எம். பி. தலைமையிலான சுயேச்சை குழு


பொதுஜன பெரமுன கட்சி


ஐக்கிய தேசியக் கட்சி

## சந்நிதியான் ஆச்சிரமத்தில் இன்று

வடமராட்சி, மார்ச் 20

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை, பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் வாராந்த நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில், ஆன்மீக அருளுரையாக மகாபாரதம் தலைப்பில் தொடர் சொற்பொழிவை இரா. செல்வவடிவேல் நிகழ்த்துவார். (ஐ-02)

## ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி கிளிநொச்சியில் வேட்புமனு தாக்கல்!

கிளிநொச்சி, மார்ச் 21

கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி, பச்சிலைப்பள்ளி பிரதேச சபைகளுக்கான வேட்புமனுக்களை ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி சார்பில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் நேற்று தாக்கல் செய்தார்.

இதன்பின்னர் ஊடகங்களிடம் கருத்து தெரிவித்த அவர்,

ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி சார்பில் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கரைச்சி பிரதேச சபை, பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்குமான வேட்புமனுக்களை இன்று (நேற்று) தாக்கல் செய்துள்ளோம்.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தல் தமிழ் மண்ணிலே வேறுபட்ட முடிவை தமிழ் மக்கள் வெளிப்படுத்தும் தேர்தலாக அமையும் என நம்புகிறேன். தமிழ் மக்களின் விருப்பம்போலவே ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி பல கட்சிகளை இணைத்து கொண்டதான கூட்டணி போட்டியிடுகின்றது.

தேர்தல் பரப்புரை விடயத்தில் கட்சிகளும் வேட்பாளர்களும் பொறுப்புணர்வுடன் நடந்துகொள்ள வேண்டும். எமது கூட்டணியில் கணிசமான பெண்களையும் இளைஞர்களையும் ஈடுபடுத்தியுள்ளோம்.

அரசியல் நாகரிகமாக தமது கருத்துகளை மக்களுக்குக்கூறி வாக்கு சேகரிக்கும் நடைமுறையை அரசியல் கட்சிகள் பின்பற்ற வேண்டும் - என்றார். (ஐ)

## ஐக்கிய மக்கள் சக்தி வவுனியாவில் வேட்புமனு

வவுனியா, மார்ச் 21

எதிர்வரும் மே 6ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வவுனியா மாவட்டத்தில் போட்டியிடுவதற்காக வேட்புமனுக்களை ஐக்கிய மக்கள் சக்தி நேற்று தாக்கல் செய்தது.

வவுனியா மாநகர சபை, வவுனியா வடக்கு பிரதேச சபை, வெண்கலசெட்டிகுளம் பிரதேச சபை, தெற்கு தமிழ் பிரதேச சபை, சிங்கள பிரதேச சபை ஆகியவற்றில் போட்டியிடுவ தற்காகவே நேற்றைய தினம் வேட்புமனுக்களை தாக்கல் செய்தது.

வேட்புமனுக்களை முத்து முகமது தலைமையிலான குழுவினர் கையளித்தனர்.

வவுனியா மாவட்டத்தில் உள்ள ஐந்து உள்ளூராட்சி சபைகளிலும் ஐக்கிய மக்கள் சக்தி இம்முறை போட்டியிடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ -10)

## சமூக பிறழ்விலிருந்து இளையோரை மீட்க கிராம அமைப்புகளால் முடியும்

### வடக்கு ஆளுநர் வேதநாயகன்

யாழ்ப்பாணம், மார்ச் 21

இளையோரை சமூகப் பணிகளிலும், கலைத்துறை, விளையாட்டுத் துறைகளில் ஈடுபடுத்த வேண்டும். சமூகப் பிறழ்வான செயல்பாடுகளிலிருந்து அவர்களை மீட்டெடுப்பதற்கு இத்தகைய வழிகளை கிராம மட்ட மக்கள் அமைப்புகளால்தான் முன்னெடுக்க முடியும் - இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

அளவெட்டி தெற்கு கலைவாணி சனசமூக நிலைய முன்றலில் அமைக்கப்பட்ட சரஸ்வதி சிலை திறப்பு விழாவிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது வீதிகளை புனரமைத்துத் தரக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இதற்கு பதிலளித்த ஆளுநர், தற்போதைய அரசாங்கம் கிராமிய வீதிகளை அபிவிருத்தி செய்வதற்கே கூடுதல் கவனம் செலுத்தியிருக்கிறது. அதற்கு அமைவாக இந்த ஆண்டு 500 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு சிலவற்றை புனரமைப்பதுடன் எஞ்சியவற்றை அடுத்த ஆண்டுகளில் புனரமைக்க எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

மக்களின் ஆர்வமும், பங்களிப்பும் இருந்தால்தான் அபிவிருத்திகளை விரைவில் நிறைவேற்ற முடியும் எனக் குறிப்பிட்ட ஆளுநர், இந்தச் சனசமூக நிலையம் நூற்றாண்டுகளை கடந்து சேவையாற்ற வேண்டும் - என்றார். (ஐ-02-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
21.03.2025 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம், பங்குனி 07

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## எவராலும் அதிசயங்களை நிகழ்த்த முடியாது

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தின் கைப்பாவையாக மாறிவிட்டதாகவும் நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு அடிபணிந்து செயல்படுவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்திருக்கிறார். ஒருகாலத்தில் அநுர குமார திஸநாயக்கதான் இவ்வாறான விமர்சனங்களை முன்வைப்பதுண்டு. இடதுசாரிகள் பொதுவாகவே சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியை அமெரிக்க முகவர்கள் என்று அழைப்பதுண்டு. ஆனால், ஆட்சியில் இருப்பவர்கள் அவ்வாறு கூறுவதை கற்பனையில்கூட எண்ணிப்பார்க்க முடியாது. ஏனெனில், அது உலக யதார்த்தமல்ல.

சஜித் பிரேமதாஸவால் இவ்வாறு கூறமுடிகிறது என்றால் அதன் பொருள் அவர் அதிகாரத்தில் இல்லை என்பதுதான். அவர் அதிகாரத்தில் இருந்திருந்தால் இப்போது அவர் கூறுவதை அநுர குமார திஸநாயக்க கூறியிருப்பார். இவ்வளவுதான் உள்நாட்டு அரசியல். ஜனாதிபதி ட்ரம்ப் அமெரிக்காவின் வெளிநாட்டு உதவிகளை தற்காலிகமாக இடைநிறுத்தியதால் உலகம் முழுவதிலுமுள்ள மனிதநேய செயல்பாடுகள் முற்றிலுமாக முடங்கியிருக்கின்றன. இதனை யாரால் நிவர்த்தி செய்ய முடியும் - சாதாரணமாக அமெரிக்க உதவி நிறுவனத்தை எவர் வேண்டுமானாலும் விமர்சித்துவிட்டுப் போகலாம். ஆனால், அமெரிக்கா ஒரு விடயத்திலிருந்து வெளியேறும்போது முழு உலகமும் பாதிக்கப்படுகின்றது.

இதன் காரணமாகத்தான் சில விடயங்களைப் பேசுகின்றபோது கேட்பதற்கு நன்றாக இருக்கும். ஆனால், அவற்றின் நடைமுறை பயன்பாடு பெறுமதியற்றதாக இருப்பதுண்டு. இலங்கையில் எவர் ஆட்சியில் இருந்தாலும்கூட அவர்களால் உலக அரசியல் யதார்த்தங்களுக்குப் புறம்பாக ஒரு துரும்பையும் அசைக்க முடியாது. இது அதிகாரத்தில் இருப்பவர்களுக்குக்கும் - அதிகாரத்துக்காகக் காத்துக் கொண்டிருப்பவர்களுக்கும் - உரிமைகள் நிலைநாட்டப்பட வேண்டும் என்று குரலெழுப்பிக் கொண்டிருக்கும் தமிழர்கள் போன்ற அனைவருக்கும் பொருந்திப்போகும்.

இடதுசாரித்துவம் பேசுவது போன்று ஓர் இடதுசாரித்துவ ஆட்சியை நடத்திச் செல்ல முடியாது. தேசிய மக்கள் சக்தி அரசாங்கமானது, இதுவரையான உள்நாட்டு அதிகாரப் பிரிவினரின் அணுகுமுறைகளில் மாற்றத்தைக் காண்பிக்கிறதே தவிர, அரசியல் கொள்கை நிலைப்பாட்டில் ஏனையவர்கள் போன்று உலகத்தோடு ஒத்தோடும் போக்கையே கடைப்பிடித்து வருகிறது. அப்படியிருந்தால்தான் ஆட்சியில் நீடிக்க முடியும்.

மூன்றாம் உலக நாடுகளைப் பொறுத்தவரையில் பலம்பொருந்திய நாடுகளை அனுசரித்துச் செல்ல வேண்டியது ஓர் அரசியல் நிர்ப்பந்தமாகும் - அது எந்தத் தரப்பு என்பதை அவர்களின் நலன்களிலிருந்து தீர்மானிக்க முடியும். ஆனால், ஏதோவொரு பலம் பொருந்திய நாட்டுடன் அனுசரிக்காமல் நாட்டை நிர்வகிக்க முடியாது.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அல்ல எவர் ஆட்சியமைத்தாலும்கூட, சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டுத்தான் ஆக வேண்டும். மாற்றுத் தெரிவுகள் இல்லை. மாற்றுத் தெரிவு இருக்கலாம் ஆனால், அது கொதிக்கும் பாத்திரத்திலிருந்து அடுப்புக்குள் விழும் முடிவாகவே இருக்க முடியும்.

## மக்களால் புனரமைக்கப்பட்ட கோவிற்சந்தை திறந்து வைப்பு!



வடமராட்சி,மார்ச் 21

மக்களின் நிதிப் பங்களிப்பில் புனரமைக்கப்பட்ட கரவெட்டி கோவிற்சந்தை நேற்று திறந்து வைக்கப்பட்டது.

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை செயலாளர் கணேசன் கம்ஸநாதன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது. முதல் நிகழ்வாக விருந்தினர்கள் மலர் மாலை அணிவிக்கப்பட்டு வரவேற்கப்பட்டனர். தொடர்ந்து மங்கல விளக்கு ஏற்றப்பட்டது.

அதனைத் தொடர்ந்து தேசியக் கொடி, பிரதேச சபை கொடி ஏற்றப்பட்டமையைத் தொடர்ந்து மக்களின் பூரண நிதி பங்களிப்புடன் கட்டிமுடிக்கப்பட்ட சந்தையின் இறைச்சிக் கடை, மீன் சந்தை தொகுதிகளை வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன் திறந்துவைத்தார்.

இந்நிகழ்வில் கோயில் சந்தை பிரதேச மக்கள், கோயிற்சந்தை பிரதேச அபிவிருத்தி கூட்டுறவு சங்க நிர்வாகிகள், உறுப்பினர்கள், கரவெட்டி தெற்கு மேற்கு பிரதேசம் சபை உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எனப் பலர் பங்கேற்றனர். (ஐ-02-05)

## வடமராட்சியில் அதிக ஒலியை கட்டுப்படுத்த நடவடிக்கை!

வடமராட்சி, மார்ச் 21

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் அதிக ஒலி எழுப்பப்படுவதை கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மதத் தலங்கள், பொது நிகழ்வுகள், வீடுகளில் அதிக ஒலி எழுப்பப்படுவதால் கல்வி கற்கும் மாணவர்கள், வயோதிபர்கள் மற்றும் கர்ப்பவதித் தாய்மார்கள் உட்பட பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர் என்று கூறப்படுகிறது.

மதத் தலங்கள் மற்றும் ஒலி வழங்குநர்கள் குறித்த பிரதேசத்துக்குள் ஒலி எழுப்புவதற்கு இனி மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் அனுமதி பெற வேண்டும். குறித்த அறிவிப்பு வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் கு. பிரபாகரமூர்த்தியால் விடுக்கப்பட்டு அனைத்துப் பிரதேசங்களிலும் சுவரொட்டி மூலம் காட்சிப் படுத்தப்பட்டுள்ளது. (ஐ-02)

## 290 போதை மாத்திரைகளுடன் கொக்குவிலில் இளைஞர் கைது!




யாழ்ப்பாணம், மார்ச் 21

கொக்குவிலில் 290 போதை மாத்திரைகளுடன் 27 வயது இளைஞர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மானிப்பாய் பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், மானிப்பாய் பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி ஜீ.ஜே.குண திலகவின் கீழ் இயங்கும் பொலிஸ் குழுவினரால் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார். விசாரணைகளின் பின்னர் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ-05)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**

சந்திராஷ்டமம் இருப்பதால் சிக்கலான சவாலான காரியங்களையும் கையில் எடுத்துக் கொண்டிருக் காதீர்கள். வியாபாரத்தில் போட்டிகள் இருக்கும். வேலைச்சுமை மிகுந்த நாள்.

**இடபம்**

பிள்ளைகள் உங்கள் பேச்சிற்கு மதிப்பளிப்பார்கள். வியாபாரத்தில் வேலையாட்களின் ஆதரவு கிடைக் கும். உத்தியோகத்தில் தைரியமாக முடிவுகள் எடுப்பீர்கள். நன்மை கிட்டும் நாள்.

**மிதுனம்**

சமயோசிதமாகவும் சாதுர்யமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். அதிகார பதவியில் இருப்பவர்களின் அறிமுகமும் கிடைக்கும். வியாபாரத்தில் புது யுக் திகளை கையாளுவீர்கள். அமோகமான நாள்.

**கடகம்**

குடும்ப வருமானத்தை உயர்த்த புது முயற்சிகளை மேற்கொள்வீர்கள். அக்கம் - பக்கம் வீட்டாரின் ஆத ரவு பெருகும்.வியாபாரத்தில் புது ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். புது வாய்ப்புகள் தேடி வரும்.

**சிம்மம்**

திட்டமிட்ட காரியங்களை சிறப்பாக முடிப்பீர்கள். தாய்வழி உறவினர்களால் அலைச்சல் ஏற்படும். வியாபாரத்தில் லாபம் கணிசமாக உயரும். சக ஊழியர்களால் நிம்மதி கிட்டும். உதவி கிட்டும்.

**கன்னி**

குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளை புரிந் துக் கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். சில நுணுக்கங்களை கற்றுக் கொள் வீர்கள். துணிச்சலுடன் செயல்பட வேண்டிய நாள்.

**துலாம்**

குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். எதிர்பாராத இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும். வியாபாரத தில் வேலையாட்கள் மதிப்பார்கள். மேலதிகாரி வியப்பார். மனசாட்சி படி செயல்படும் நாள்.

**விருட்சிகம்**

கணவன் - மனைவிக்குள் மனஸ்தாபம் நீங்கும். பழைய கடனைத் தீர்க்க முயற்சி செய்வீர்கள். வெளி உணவுகளை தவிர்ப்பது நல்லது. விவாதம் வேண் டாம். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**தனுசு**

எதிர்பார்ப்புகள் நிறைவேறும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் ரசனையைப் புரிந்துக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் புது பொறுப்பு களை ஏற்பீர்கள். மதிப்புக் கூடும் நாள்.

**மகரம்**

ராசிக்குள் சந்திரன் இருப்பதால் முக்கிய அலுவல் களை மற்றவர்களை நம்பி ஒப்படைக்காமல் நீங் களே முடிப்பது நல்லது. அதிகாரி கள் குறைக்கூறு வார்கள். பேச்சில் இங்கிதம் தேவைப்படும் நாள்.

**கும்பம்**

சொந்த பந்தங்கள் சிலர் கேட்ட உதவியை செய் வீர்கள். வியாபாரத்தில் புது சலுகைகளை அறிவிப் பீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் முன் வைத்த கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள்.

**மீனம்**

கணவன் - மனைவிக்குள் அன்யோன்யம் பிறக் கும். வியாபாரத்தில் சில சூட்சுமங்களைப் புரிந் துக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். நன்மைகள் நடக்கும் நாள்.

# சிங்கள பிரதேச சபையில் மட்டும் போட்டியிடும் பொதுஜன பெரமுன

வவுனியா, மார்ச்.21

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வவுனியா மாவட்டத்தில் சிங்கள பிரதேச சபையில் மாத்திரம் போட்டியி டுவதற்கான வேட்புமனுவை சிறீலங்கா பொதுஜன பெரமுன நேற்றுத் தாக்கல் செய்தது.

வவுனியா மாவட்டத்தில் ஐந்து உள்ளூராட்சி மன்றங்கள் உள்ள நிலையில் சிங்கள பிரதேச சபையில் மாத்திரம் குறித்த கட்சி இம்முறை போட்டியிட வுள்ளது.

இதேவேளை, கடந்த உள்ளூ ராட்சி மன்றத் தேர்தலில் சிங் கள பிரதேச சபையின் ஆட்சி அதிகாரத்தை பொதுஜன பெர முன கைப்பற்றியிருந்தது. (எ-10)

# வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபைக்கு தமிழ் அரசு கட்சி வேட்புமனுத் தாக்கல்

வவுனியா, மார்ச்.21

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபைக்கு போட்டியிடுவதற்கான வேட்பு மனுவை இலங்கை தமிழ் அரசுக் கட்சி நேற்றுத் தாக்கல் செய்தது.

நேற்று முன்தினம் வவுனியா மாநகர சபை மற்றும் வவுனியா வடக்கு பிரதேச சபை, வெண்க லச்செட்டிக்குளம் பிரதேச சபை ஆகியவற்றில் போட்டியிடுவ தற்கான வேட்புமனுவை தாக் கல் செய்திருந்தது.



இந்த நிலையில் நேற்று வவு னியா தெற்கு தமிழ் பிரதேச சபைக்கான வேட்புமனுவை பாராளுமன்ற உறுப்பினர் ப. சத்தியலிங்கம், வேட்பாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் சகிதம் சென்று மாவட்ட தேர்தல்கள் அலுவலகத்தில் கையளித்தார். (எ- 10)

# தேசிய மக்கள் சக்தி வேட்புமனு தாக்கல்

வவுனியா, மார்ச்.21

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத்தேர்தலில் போட்டியிடு வதற்கான வேட்புமனுவை தேசிய மக்கள் சக்தி நேற்றுத் தாக்கல் செய்தது.

வவுனியா மாநகரசபை, வவுனியா வடக்கு பிரதேச சபை, வெண்கலச்செட்டிக்குளம் பிர தேச சபை, தெற்கு தமிழ் பிர தேச சபை, சிங்கள பிரதேச சபை ஆகியவற்றில் போட்டியிடுவ தற்கான வேட்புமனுவை நேற் றுத் தாக்கல் செய்தது.



இந்த வேட்புமனுவை பாரா ளுமன்ற உறுப்பினர் செ. திலகநாதன், வேட்பாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் சகிதம் சென்று மாவட்ட தேர்தல்கள் செயலகத்தில் கையளித்தார்.

வவுனியா மாவட்டத்தில் உள்ள ஐந்து உள்ளூராட்சி சபைகளிலும் தேசிய மக்கள் சக்தி இம்முறை போட்டியிட வுள்ளது. (எ-10)


# கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு மணல் கடத்தி வந்த டிப்பர் மடக்கிப்பிடிப்பு

## சாவகச்சேரி பொலிஸார் அதிரடி, சாரதி தப்பியோட்டம்

யாழ்ப்பாணம், மார்ச்.21

அனுமதிப்பத்திரம் இன்றி கிளிநொச்சியிலிருந்து யாழ்ப் பாணத்துக்கு மணல் கடத்தி வந்த டிப்பர் நேற்று முன்தினம் இரவு மடக்கிப் பிடிக்கப்பட் டுள்ள நிலையில் சாரதி தப்பிச் சென்றுள்ளார்.

நேற்று முன்தினம் நள்ளிரவு 12.00 மணியளவில் பளையிலி ருந்து அச்சுவேலி நோக்கி மணல் கடத்தி வந்த டிப்பரை சாவகச் சேரி பொலிஸார் வழிமறித்த வேளை குறித்த டிப்பர் நிற்கா மல் சென்றது. இதன்போது, சாவகச்சேரி பொலிஸார் வேகத் தடையை வீதியில் போட்ட வேளை டிப்பரின் சக்கரங்கள் காற்றுப் போனது.



இந்த நிலையில் டிப்பரை நிறுத்திவிட்டு சாரதி தப்பிச் சென்றுள்ளார். பின்னர் சாவகச் சேரி பொலிஸார் டிப்பரை பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு சென்றனர். இது குறித்து நீதிமன் றத்தில் வழக்குத் தாக்கல் செய்வ தற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வரு கின்றனர்.

அண்மைக்காலமாக அனும திப்பத்திரம் இன்றி மணல் கடத்தி வரும் டிப்பர்களை மடக்கிப் பிடிப்பதற்கு சாவகச் சேரி பொலிஸார் பல்வேறு அதி ரடி நடவடிக்கைகளை மேற் கொண்டு வருகின்றனர். (எ- 05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3,100 கட்சிகள் கட்டுப்பணம்!

## தேர்தல்கள் ஆணையாளர் தகவல்

கொழும்பு, மார்ச் 21

**எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான கட்டுப்பணம் செலுத்தும் காலம் நேற்றுடன் நிறைவடைந்துள்ள நிலையில் மூவாயிரத்து 100 அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் கட்டுப்பணம் செலுத்தியுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.**

இராஜகிரியவில் அமைந்துள்ள தேர்தல்கள் ஆணைக்குழுவில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்-எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான கட்டுப்பணம் செலுத்தும் காலம் நேற்று முன்தினம் நிறைவடைந்துள்ளது.

நாடு முழுவதும் நேற்று முன் தினம் வரை மூவாயிரத்து 100 அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்கள் கட்டுப்பணம் செலுத்தியுள்ளன.

வேட்பு மனுத்தாக்கல் செய்யும் கட்சிகளும் வேட்பாளர்களும் தமது சொத்து விபரங்களை சமர்ப்பித்திருத்தல் கட்டாயமானதாகும்.

அது இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் புதிய சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வாறு சமர்ப்பிக்காத கட்சிகள் மற்றும் வேட்பாளர்களது விபரங்களை இலஞ்ச, ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவுக்கு வழங்குவதற்கு தீர்மானித்துள்ளோம்.

இதேவேளை, கட்டுப்பணம் செலுத்திவிட்டு வேட்புமனுத் தாக்கல் செய்யாத அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் பணம் மீள கையளிக்கப்படும். அவ்வாறான ஏற்பாட்டுக்கு குறிப்பிட்ட காலம் எடுக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்-என்றார். (அ)

# உள்ளூராட்சி அதிகாரத்தை நிச்சயம் கைப்பற்றுவோம்!

## பிரதி அமைச்சர் சுனில் வட்டகல

கொழும்பு, மார்ச் 21

கொழும்பில் வாழும் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரிவித்துள்ளார்.



கொழும்பு மாவட்ட செயலகத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்பு மனுவை தாக்கல் செய்த பின்னர் ஊடகங்களுக்கு அவர் இவ்வாறு கருத்து வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-ஜனாதிபதி மற்றும் மத்திய அரசாங்கத்தின் அதிகாரம் தேசிய மக்கள் சக்தியின் வசம் உள்ளது. அதேபோல உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரத்தையும் நிச்சயம் பெறுவோம்.

நாட்டு மக்கள் வேறு கட்சிகளுக்கு வாக்களிக்க மாட்டார்கள்.

கொழும்பில் வாழும் மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் வேலைத்திட்டம் ஏற்கனவே தயாரிக்கப்பட்டு நிறைவுசெய்யப்பட்டுள்ளது. கொழும்பு மாநகர சபையை எமது கட்சி நிச்சயமாக கைப்பற்றும்.

கொழும்பு மாநகர சபை உள்ளிட்ட நாட்டின் அனைத்து உள்ளூராட்சி மன்றங்களிலும் தேசிய மக்கள் சக்தியை வெற்றிபெறச் செய்வதற்கு மக்கள் தீர்மானித்துள்ளார்கள்-என்றார். (அ)

# அறிவார்ந்தோர் அரசுக்கு வாக்களிக்க மாட்டார்கள்

## சாகர காரியவசம் கூறுகிறார்

கொழும்பு, மார்ச் 21

அரசாங்கத்தின் பொய்களை உணர்ந்துகொண்டுள்ள அறிவார்ந்த வாக்காளர்கள் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களிக்க மாட்டார்கள் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

கொழும்பு மாவட்ட செயலகத்தில் உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான வேட்பு மனுவை நேற்று தாக்கல் செய்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-கொழும்பில் உள்ளூராட்சி மன்றங்களுக்கான வேட்பு மனுவை நாம் தாக்கல் செய்துள்ளோம்.

வெற்றியடையக்கூடிய திறமையானவர்களை பொதுஜன பெரமுன இம்முறை களமிறக்கியுள்ளது.

மேயர் வேட்பாளர் அல்லது பிரதான வேட்பாளர் என நாம் யாரையும் பெயர் குறிப்பிடவில்லை. வெற்றி பெற்றதன் பின்னர் செயற்பாட்டின் அடிப்படையில் அவ்வாறான பதவிகள் வழங்கப்படும்.

அரசாங்கம் தொடர்ச்சியாக மக்களை ஏமாற்றி வருகிறது. மக்களுக்கு பொய்களைக் கூறி வெற்றிபெறலாம் என நினைத்தால் தேசிய மக்கள் சக்தி வெற்றிபெறலாம்.

ஆயினும் அறி வார்ந்த பொதுமக்கள் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களிக்க மாட்டார்கள்-என்றார். (அ)

# கட்சி உறுப்பினர்களை நீக்கிவிட்டு முன்னோக்கிப் பயணிக்க முடியாது

## திஸ்ஸ அத்தநாயக்க சுட்டிக்காட்டு

கொழும்பு, மார்ச் 21

கட்சியிலிருந்து உறுப்பினர்களை நீக்கிவிட்டு முன்னோக்கிப் பயணிக்க முடியாது எனத் தெரிவித்துள்ள ஐக்கிய மக்கள் சதியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க, இம்தியாஸ் பாகீர் மாக்கரின் இராஜினாமா தொடர்பாக உரிய தீர்வு முன்வைக்கப்படும் என்று குறிப்பிட்டார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது இம்தியாஸ் பாகீர் மாக்கார் பதவி விலகியமைக்கான காரணம் என்ன என்பது தனக்கு தெரியாது எனவும்,எவ்வாறிருப்பினும் இது கட்சிக்கு பாரிய இழப்பாகும் எனவும் அவர் கூறினார்.

அத்துடன் இம்தியாஸ் பாகீர் மாக்கார் மக்கள் மத்தியில் செல்வாக்கு மிக்க ஒருவராவார் எனவும், ஐக்கிய தேசிய கட்சிக்கும் ஐக்கிய மக்கள் சக்திக்கும் பாரிய சேவைகளை ஆற்றியுள்ளார் எனவும், அவரது இராஜினாமா கடிதத்தை கட்சி உத்தியோகபூர்வமாக ஏற்றுக் கொள்ளவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.



இதேவேளை வேட்புமனு தாக்கல் நிறைவடைந்த பின்னர் கட்சியின் நிர்வாகக் குழு கூடவுள்ளதாகத் தெரிவித்த அவர்,இதன் போது குறித்த விடயங்கள் தொடர்பாக அவதானம் செலுத்தப்படும் எனவும், எவ்வாறிருப்பினும் இந்த சந்தர்ப்பத்தில் கட்சியிலிருந்து எவரையும் இழக்கவோ நீக்கவோ தாம் எதிர்பார்க்கவில்லை எனவும், கட்சியிலிருந்து உறுப்பினர்களை நீக்கிவிட்டு முன்னோக்கிப் பயணிக்க முடியாது எனவும் தெரிவித்துள்ளார். (அ)

# அரசாங்கம் பெறும் கடன்கள் குறித்து பாராளுமன்றில் விவாதிக்கவேண்டும்

## ஹர்ஷ டி சில்வா கோரிக்கை

கொழும்பு, மார்ச் 21

அரசாங்கத்தினால் பெறப்படுகின்ற கடன்கள் தொடர்பிலும் நாடாளுமன்றில் விவாதம் நடத்தப்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா வலியுறுத்தியுள்ளார்.

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு தொடர்பான இன்றைய குழுநிலை விவாதத்தில் கருத்துரைத்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அரசாங்கம் பாதீட்டை முன்வைக்கும் போது எந்த அளவு தொகை, கடன் பெறப்பட வேண்டும் என்பதனை மாத்திரமே கூறுகின்றது.

எனினும் அந்த கடன் தொடர்பில் பாராளுமன்றில் முறையான விவாதம் நடத்தப்பட்டு, அந்த கடன் அளவை எவ்வாறு குறைக்க முடியும் என்பது தொடர்பில் ஆராய வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் அரசாங்கம் சர்வதேச பிணை பத்திர உரிமையாளர்களுடனான உடன்படிக்கையை வெளிப்படுத்துமானால் நாங்கள் மகிழ்ச்சியடைய முடியும்.

கடன் ஸ்தீரநிலை ஆய்வினை மாற்றுவதாக அரசாங்கம் ஆரம்பத்தில் கூறியிருந்த போதிலும் அவ்வாறு செயற்படவில்லை.

குறிப்பாக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் ஆட்சிக் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட கடன் மறுசீரமைப்பு திட்டத்தை அவ்வாறே கொண்டு



செல்வதற்குச் சர்வதேச நாணய நிதியத்துடனான சில நிமிட கலந்துரையாடலிலேயே அரசாங்கம் ஏற்றுக் கொண்டது.

அதில் எந்தவித மாற்றத்தையும் தற்போதைய அரசாங்கம் ஏற்படுத்தவில்லை.

எனவே, முடியுமானால் சர்வதேச பிணை பத்திர உரிமையாளர்களுடனான உடன்படிக்கையை அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா வலியுறுத்தியுள்ளார்.

அதேபோன்று உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பின் போது இலங்கையில் உள்ள உழைக்கும் சாதாரண மக்களே அதிகளவில் பாதிப்படைவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும் தற்போதைய அரசாங்கம் அந்த விடயம் தொடர்பில் எந்த கருத்துக்களையும் முன்வைப்பதில்லை.

இதன்படி, செலவினங்கள் தொடர்பில் அதிகளவில் பாராளுமன்றில் கருத்தாடல்கள் இடம்பெற்றுள்ளன.

வரவுகள் குறித்து கருத்துக்கள் முன்வைக்கப்படுவதில்லை. பெறப்படவுள்ள கடன்கள் தொடர்பில் கருத்துரைக்கப்படுவதில்லை.

எனவே, அவ்வாறான கடன்கள் தொடர்பில் தொழில்நுட்ப ரீதியாகவும், ஆய்வு ரீதியாகவும் விவாதிக்கப்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார். (அ)

# ஷானி அபேசேகரவின் மனு பரிசீலனை ஒத்திவைப்பு!

கொழும்பு, மார்ச் 21

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகரவினால் சமர்ப்பிக்கப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவை எதிர்வரும் ஒக்ரோபர் 16 ஆம் திகதி ஒத்திவைத்து உயர்நீதிமன்றம் நேற்று தீர்ப்பளித்துள்ளது.

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதலை தடுக்க தவறியமை தொடர்பிலான விசாரணைகள் குறித்து குற்றப்புலனாய்வு திணைக்களம் தம்மைக் கைது செய்வதை தடுக்கும் உத்தரவை பிறப்பிக்குமாறு கோரி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.இந்த மனு உயர்நீதிமன்ற நீதியரசர்களான ஜனக் டி சில்வா, பிரியந்த பெர்னாண்டோ மற் றும் சம்பத் அபேகோன் ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16 இலட்சம் கிலோ கிராம் நெல் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது

## பாதுகாப்பு அமைச்சு தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 21

**கடந்த வருட பெரும்போகத்தில் 4471 ஏக்கர் நெல் பயிரிடப்பட்டது. சிவில் பாதுகாப்புத் திணைக்களப் படைகளுக்கு சொந்தமான களஞ்சியசாலைகளில் 16 இலட்சம் கிலோ கிராம் நெல் சேமித்து வைக்கப்பட்டுள்ளது.**

சுமார் 305 ஏக்கர் நிலப்பரப்பில் சோளம் பயிரிடப்பட்டுள்ளதாகவும், அந்த பயிர்களின் அறுவடை ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. அத்துடன் தென்னையை பொருளாதார பயிராகவும், பழங்கள் மற்றும் மரக்கறிகளை இடைபயிர்களாகவும், குரக்கன், எள் போன்ற தானியங்களை சந்தைக்கு அனுப்புவதன் மூலம் உணவு பாதுகாப்பை உருவாக்க சிவில் பாதுகாப்பு திணைக்களம் தனது அதிகபட்ச பங்களிப்பை வழங்கும் என பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

# சிகரெட் வரி வசூலிக்கப்படும் முறைமை மிகவும் தவறானது

## ஹர்ஷ டி சில்வா சுட்டிக்காட்டு

கொழும்பு, மார்ச் 21

சிகரெட் வரி வசூலிக்கப்படும் முறை தவறானது என பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று வரவு -செலவுத் திட்டம் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். உலக சுகாதார அமைப்பின் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கைக்கு அமைய, ஒரு சிகரெட் விற்பனைக்கு 75 வீத வரி விதிக்கப்பட வேண்டும் எனவும் அவர் மேலும் சுட்டிக் காட்டினார்.

இந்த விவகாரம் தொடர்பில் தொடர்ந்து கருத்து வெளியிட்ட அவர், சிகரெட் வரி குறித்து பாராளுமன்றத்தில் மிக விரைவில் தீர்மானமொன்று எடுக்கப்பட வேண்டும்-என்றார். (அ)

# கெஹலியவின் கோரிக்கையை நிராகரித்தது மேல் நீதிமன்றம்!

கொழும்பு, மார்ச் 21

இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் விசாரணை தொடர்பில் பாராளுமன்றக் கிளையில் உள்ள வங்கிக் கணக்கை இடைநிறுத்திய உத்தரவை மீளப்பெறுமாறு முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவின் சட்டத்தரணிகள் விடுத்த கோரிக்கையை கொழும்பு மேல் நீதிமன்றம் நிராகரித்துள்ளது. கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆதித்ய படபாண்டிகே இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளார்.

இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் விசாரணை தொடர்பில் முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல மற்றும் அவரது குடும்பத்தினருக்கு சொந்தமான பல வங்கி கணக்குகள் மற்றும் காப்புறுதி ஒப்பந்தங்களை இடைநிறுத்தி கொழும்பு மேல் நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்தது.

ரம்புக்வெலவின் பாராளுமன்றக் கிளையில் உள்ள வங்கிக் கணக்கிலும், அவரது ஓய்வூதியமும், அவரது இல்லத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் ஏற்பட்ட சேதத்திற்காக பெறப்பட்ட ரூ.95.9 மில்லியனுக்கும் அதிகமான இழப்பீட்டுத் தொகையும் வைப்பில் செய்யப்பட்டிருந்த நிலையில், இந்த உத்தரவின் கீழ் அது முடக்கப்பட்டது.

இந்த குறிப்பிட்ட வங்கிக் கணக்கின் முடக்க உத்தரவை நீக்கக் கோரி ரம்புக்வெலவின் சட்டத்தரணிகள் அண்மையில் ஒரு கோரிக்கையை தாக்கல் செய்திருந்தனர். அதன்படி, பதிலளிக்கும் விதமாக, முடக்க உத்தரவை நீக்குவதற்கான கோரிக்கை நிராகரிக்கப்படுவதாக கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி அறிவித்தார். (அ)

# வாகனங்களை விடுவிப்பதில் உள்ள தடையை நீக்குவதற்கு அதிவிசேட வர்த்தமானி வெளியீடு!

கொழும்பு, மார்ச் 21

ஜப்பானிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு சுங்கத்தில் சிக்கியுள்ள சுமார் 400 வாகனங்களை விடுவிப்பதில் ஏற்பட்டிருந்த தடையை நீக்குவதற்காக நிதியமைச்சு என்ற அடிப்படையில் ஜனாதிபதியினால் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த வர்த்தமானி அறிவித்தலில் குறித்த வாகனங்களை இலங்கைக்கு அனுப்புவதற்கான பரிசோதனை உறுதிப்படுத்தலைப் பெற்றுக் கொள்ளும் பணியகத்துக்கு அதற்கான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் வாகனங்களைச் சுங்கத்திலிருந்து விடுவிப்பதற்குக் காணப்பட்ட ஏனைய தடைகளும் இந்த வர்த்தமானி அறிவித்தலினூடாக நீக்கப்பட்டுள்ளது.

ஜப்பானிலிருந்து இறக்குமதி செய்யப்படும் வாகனங்களுக்காக வழங்கப்படும் ஜப்பானின் ஏற்றுமதி பரிசோதனை சான்றிதழைப் பெற்றுக் கொண்ட நிறுவனங்களுக்கு அந்த வாகனங்களைச் சுங்கத்திலிருந்து விடுவிப்பதில் சிக்கல் ஏற்பட்டிருந்தது.

இந்தநிலையில் குறித்த வர்த்தமானி அறிவித்தலில் ஜப்பான் உள்ளிட்ட சகல நாடுகளிலிருந்தும் இறக்குமதி செய்யப்படும் வாகனங்களுக்கான பரிசோதனை சான்றிதழை ஏற்றுக் கொள்ளும் வகையிலான திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் இந்திக சம்பம் மெரஞ்சிகே தெரிவித்தார். (அ)

# ஹர்ஷ டி சில்வா எதிர்க்கட்சி தலைவராவாரோ தெரியாது!

## அமைச்சர் வசந்த சமரசிங்க

கொழும்பு, மார்ச் 21

தற்போது நடக்கும் சம்பவங்களைப் பார்த்தால் ஹர்ஷ டி சில்வா எதிர்க்கட்சி தலைவராகிவிடுவாரோ தெரியாது என வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

பாதீடு மீதான நிதி அமைச்சின் செலவு தலைப்பு தொடர்பில் நடைபெற்ற குழுநிலை விவாதத்தின் போது அமைச்சர் இது தொடர்பில் உரையாற்றி னார்.

அமைச்சர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்-ஹர்ஷ டி சில்வா இல்லையென்றால் எதிர்க்கட்சி இல்லை போல. அது தான் பிரச்னை. போகும் போக்கைப் பார்த்தால் ஹர்ஷ டி சில்வா எதிர்க்கட்சித் தலைவராகிவிடுவாரோ தெரியாது. 10 வருடங்களுக்குப் பழைமையானவை மாத்திரமல்ல 15 வருடங்களுக்குப் பழைமையான விசாரணைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

நாங்கள் ஆட்சிக்கு வந்து ஐந்து மாதங்கள் தான் ஆகின்றது. சிலர் வரலாற்றை மறந்து செல்வதற்கு முயற்சிக்கிறார்கள். ஆனால் வரலாற்றை மறக்க முடியாது.

குற்றவாளிகள் நிச் சயம் தண்டிக்கப்படுவார்கள்- என்றார் (அ)

# தேயிலை ஏற்றுமதி வீழ்ச்சி!

கொழும்பு, மார்ச் 21

கடந்த பெப்ரவரி மாதத்தில் இலங்கையின் தேயிலை ஏற்றுமதி ஒப்பீட்டளவில் குறைவடைந்துள்ளதாகத் தேயிலை தரகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய, கடந்த மாதம், 2.04 மில்லியன் கிலோகிராம் தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது கடந்த ஆண்டு பெப்ரவரி மாதத்தில் ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலையுடன் ஒப்பிடுகையில் 1.9 மில்லியன் கிலோகிராம் குறைவாகும் எனத் தேயிலை தரகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது (அ)

# இந்தோனேசிய தூதுவர் பிரதமருடன் சந்திப்பு

## பொருளாதார உறவுகளை மேம்படுத்தவும் கவனம்!

கொழும்பு, மார்ச் 21

பிரதமர் ஹரிணி அமரசூரிய மற்றும் இலங்கைக்கான இந்தோனேசிய தூதர் தேவி குஸ்டினா டோபிங் ஆகியோருக்கு இடையேயான சந்திப்பு பாராளுமன்ற வளாகத்தில் நடைபெற்றது.

இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர மற்றும் பொருளாதார உறவுகளை மேம்படுத்துவது குறித்துக் கலந்துரையாடப்பட்டுள்ளது.

வர்த்தகம், சுற்றுலா, தொழில்நுட்பம் மற்றும் கல்வி ஆகிய துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துதல் மற்றும் மத சுற்றுலாத் துறை உட்படச் சுற்றுலா பரிமாற்றங்களை விரிவுபடுத்துதல் குறித்துச் சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டது. இலங்கையின் பொதுப் போக்குவரத்து அமைப்பில் மின்சார வாகனங் களைப் பயன்படுத்துவது மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறையில் ஒத்துழைப்பு குறித் தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. (அ)

# எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிலர் ரணிலை சந்தித்து முக்கிய பேச்சு

கொழும்பு, மார்ச் 21

பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் சில கட்சிகளின் உறுப்பினர்களுக்கும் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையே சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது. கொழும்பு -பிளவர் வீதியிலுள்ள முன்னாள் ஜனாதிபதியின் கட்சி அலுவலகத்தில் இந்த சந்திப்பு இடம் பெற்றுள்ளது. இச்சந்திப்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் கலந்து கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல், நாட்டின் தற்போதைய பொருளாதார மற்றும் அரசியல் நிலைமைகள் குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது. அத்துடன், பட்டலந்த ஆணைக்குழு அறிக்கை தொடர்பாக எழுந்துள்ள கருத்தாடல் குறித்தும் இதன்போது அவதானம் செலுத்தப்பட்டதாக குறித்த கலந்துரையாடலில் கலந்துகொண்ட தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

# தேசபந்து தென்னக்கோனின் வீடு ஒரு வடிசாரயத் தொழிற்சாலை!

## எட்டு வீடுகள், ஆனால் அவரது பெயரில் எந்த சொத்தும் பதிவு செய்யப்படவில்லை

கொழும்பு, மார்ச் 21

முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை கைது செய்வதற்கு விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை பிடிப்பதற்காக மேற்கொண்ட நடவடிக்கை போன்ற ஒன்றில் பொலிஸார் ஈடுபட்டனர் என சட்டமா அதிபர் திணைக்களத்தின் சார்பில் நீதிமன்றத்தின் ஆஜராகிய மேலதிக சொலிசிட்டர் ஜெனெரல் திலீபா பீரிஸ் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது-கைது செய்வதற்கான பிடியாணை பிறப்பிக்கப்பட்ட பின்னர் இவரை கண்டுபிடிப்பதற்கு பொலிஸார் பெரும் தேடுதல் நடவடிக்கையை ஆரம்பித்தனர். பிரபாகரனை தேடுவது போல.

இவர் நேற்றுவரை தனது சமூக மத செல்வாக்கை பாவித்து கைது செய்யப்படுவதை தவிர்த்து வந்தார்.

இவர் தனது முகவரியாக வழங்கியுள்ள வீட்டில் உண்மையில் பௌத்த மதகுரு ஒருவர் வசிக்கின்றார்.

கடந்த சில நாட்களாக பொலிஸார் விசாரணை செய்தனர். செல்வாக்குள்ளவர்களுடன் இவர் உடன்பாடுகளை செய்துகொண்டுள்ளார். இவரது வீட்டை சோதனையிட்டவேளை 795 மதுபானப் போத்தல்கள் அங்கு காணப்பட்டன. 100க்கும் மேற்பட்ட ஆடம்பர பரிசுக் கூடைகள் காணப்பட்டன. அரசாங்க ஊழியர்களால் சிறிய பரிசுப் பொதியை கூட பெறமுடியாது. இவரால் எப்படி இதனை பெற முடிந்தது. அவரது வீடு ஒரு வடிசாரயத் தொழிற்சாலை ,அவரது பெயரின் கீழ் எந்தச் சொத்தும் பதிவு செய்யப்படவில்லை. ஆனால் அவருக்கு எட்டு வீடுகள் உள்ளன. இதன் காரணமாகவே இவர் திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்களை விட ஆபத்தானவர் என தெரிவிக்கின்றேன் இவர் ஒரு பிசாசு-என்றார் (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் மகிழ்ச்சியான நாடுகளின் பட்டியலில் இலங்கை பின்னடைவு!

கொழும்பு, மார்ச் 21

**உலகின் மகிழ்ச்சியான நாடுகளின் பட்டியலில் பின்லாந்து எட்டாவது ஆண்டாக முதலிடத்தைப் பிடித்துள்ளது. டென்மார்க், ஐஸ்லாந்து, நோர்வே மற்றும் சுவீடன் ஆகிய நாடுகளும் முதல் 10 இடங்களைப் பிடித்துள்ளன.**

மற்றவர்கள் மீதான நம்பிக்கை,எதிர்காலம் மீதான நம்பிக்கை, நிறுவனங்கள் மீதான நம்பிக்கை மற்றும் நண்பர்கள் மற்றும் குடும்பத்தினரின் ஆதரவு ஆகியவற்றின் காரணமாக பின்லாந்து மக்கள் ஏனையவர்களை விட மகிழ்ச்சியாக இருப்பதாக வருடாந்த மகிழ்ச்சியான நாடுகளின் பட்டியல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தரவரிசையில் முதல் 20 இடங்களுக்குள் ஐரோப்பிய நாடுகள் ஆதிக்கம் செலுத்தியுள்ளன.

இதேவேளை இஸ்ரேல் 8 ஆவது இடத்தில் உள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது.

ஹமாஸ்/டனான மோதலால் இஸ்ரேல் பாதிக்கப்பட்ட போதிலும் 8ஆவது இடத்தில் உள்ளது.

மேலும் 147 ஆவது இடத்தில் தற்போது தாலிபான்களின் ஆட்சியில் உள்ள ஆப்கானிஸ்தான் இடம்பிடித்துள்ளது.

இது இந்த பட்டியலின் இறுதி இடம் ஆகும்.

இதேவேளை இலங்கை 133 ஆவது இடத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

எனினும் கடந்த தரவுகளில் இலங்கை 128 ஆவது இடத்தில் இருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது.

(அ)

# எம்.பிக்களுக்கு மின்னணு உபகரணங்கள் வழங்குவதற்கு அநுர அரசு புதிய திட்டம்!

கொழும்பு, மார்ச் 21

பாராளுமன்ற உறுப்பினர்களின் பதவிக் காலத்தில், அவர்களுக்குத் தேவையான மின்னணு உபகரணங்களைப் பயன்படுத்துவதற்கும், அவற்றை உரிமையாக்குவதற்கும் ஒரு திட்டத்தின் கீழ் அவற்றை வழங்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

பாராளுமன்ற விவகார அமைச்சகம் வெளியிட்டுள்ள சுற்றறிக்கையின்படி, தற்போதைய பாராளுமன்ற உறுப்பினர்களின் பதவிக்காலத்துக்கு கணினிகள், நகல் இயந்திரங்கள், தொலைநகல் இயந்திரங்கள் மற்றும் மொபைல் போன்களை வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

சுற்றறிக்கையின்படி, பொருட்களின் தேய்மான மதிப்பு வாங்கிய பிறகு தவணை அடிப்படையில் பணம் வசூலிக்கப்ப டும்.

பணம் வசூலிக்கப்பட்ட பின்னர், பொருட்களின் உரிமை பாராளுமன்ற உறுப்பினருக்கு மாற்றப்படும்.

எனவே,

இந்த நோக்கத்திற் காக ஒரு பாராளுமன்ற உறுப் பினரின் பதவிக் காலத்தில் 800,000 ரூபாவை ஒதுக்க அமைச்சு முன்மொழிந்துள்ளது. முன்னதாக, பாராளுமன்ற உறுப்பினர்களின் பதவிக் காலத் தில், அவர்களிடமிருந்து ரூ. 500,000 இரண்டு தவணை களின் கீழ் ஒரு மில்லியன் ரூபாவை பெற முடியும். (அ)

# அறிவியல் ரீதியான பட்ஜெட் சமர்ப்பிப்பு

## ஜனாதிபதி அநுரகுமார தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 21

இந்த வருட வரவு-செலவுத் திட்டம் தரவுகளின் அடிப்படையில் அறிவியல் ரீதியாகவும் திட்டமிடப்பட்ட முறையிலும் செயல்படுத்தப்படும் வரவு-செலவுத் திட்டமாகும் என ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற விசேட வைத்திய நிபுணர்கள் சங்கத்தின் அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இவ்வாறு தெரிவித்தார்.

கடன்களை திருப்பிச் செலுத்தும்போது பொருளாதாரத்தில் ஏற்படும் ஆழமான தாக்கத்தைக் கருத்தில் கொள்ளாமல் வரலாற்றில் பல்வேறு அரசாங்கங்கள் கடன் பெற்றுள்ளன எனவும், அரசாங்கம் அத்தகைய முறைசாரா கடன் பெறவோ அல்லது முறைசாரா பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடப்போவதோ இல்லை எனவும், அரசாங்கம் பொருளாதார ஸ்தீரண நிலையில் அதிக கவனம் செலுத்தியுள்ளது எனவும் ஜனாதிபதி இந்த கலந்துரையாடலில் சுட்டிக்காட்டி னார்.

விசேட வைத்திய நிபுணர் சேவைக்கான சேவை யாப்பு தயாரிப்பது மற்றும் தொழில் சார் பிரச்னைகள் குறித்து விசேட வைத்திய நிபுணர்கள் சங்கத்தின் அதிகாரிகளினால் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது.

இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் அடிப்படைச் சம்பள அதிகரிப்பு, அதிகரித்த முழுமையான சம்பளத்திற்கு ஏற்ப இந்த ஆண்டு ஓய்வூதிய கொடுப்பனவு அளவு அதிகரிப்பு, கொடுப்பனவுகள் வழங்குதல் மற்றும் வருமான வரி எல்லை அதிகரிப்பு என்பன தொடர்பில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவிற்கு விசேட வைத்திய நிபுணர்கள் தங்கள் நன்றியைத் தெரிவித்தனர்.

சுகாதாரப் பணியாளர்களின் பாதுகாப்பு உட்பட பல திட்டங்கள் அடங்கிய பரிந்துரையை விசேட வைத்திய நிபுணர்கள் சங்கத்தின் அதிகாரிகள் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிடம் சமர்ப்பித்தனர்.

சுகாதார மற்றும் ஊடகத் துறை அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ, ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, விசேட வைத்திய நிபுணர்கள் சங்கத்தின் தலைவர் வைத்திய நிபுணர் டி.கே.எஸ்.என். யசவர்தன மற்றும் விசேட வைத்திய நிபுணர்கள் சங்கத்தின் அதிகாரிகள் இந்த சந்திப்பில் கலந்து கொண்டனர்.

(அ)

# அரசின் பாதையைச் சீர்குலைக்க சதி செய்வார்களாயின் நடவடிக்கை!

## சுகாதார அமைச்சர் நளிந்த



கொழும்பு, மார்ச் 21

கொடுப்பனவு இழப்பை காரணம் காட்டி அரசாங்கத்தின் பாதையை சீர்குலைக்க சதி செய்வார்களாயின், அதை எதிர்கொள்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கும் அரசாங்கம் தயாராக உள்ளது என்று சுகாதார மற்றும் வெகுசன ஊடகத் துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

மருதானை சி. எஸ். ஆர் மண்டபத்தில் அகில இலங்கை சுகாதார தொழிற்சங்க சம்மேளனத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட, தொழிற்சங்க பிரதிநிதிகளின் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும், "நாட்டுக்காகப் பணிபுரியும் சுய விருப்பத்துடன் முன்வரும் சுகாதார ஊழியர்களுடன் இணைந்து அரசாங்கம் என்ற ரீதியில் பொது மக்கள் சார்பாக நின்று, அவர்கள் எதிர்பார்க்கும் சுகாதார சேவைகளை வழங்க தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் பணியாற்றுவோம் என இத்தருணத்தில் உறுதியளிக்கிறேன்.

இப்பணியை முன்னெடுப்பதில் எவ்வாறான தடைகள் எழுந்தாலும், மக்கள் அரசாங்கத்துடனே இருப்பார்கள். அரசாங்கத்தின்மீதான பொதுமக்களின் நம்பிக்கை இருக்கும் வரை பிற்போக்குவாதிகளை தோற்கடிக்க முடியும் என்ற நம்பிக்கை உள்ளது.

நாடு மறுமலர்ச்சியை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் இந்த நேரத்தில், நாட்டின் சுகாதார சேவையை தேசிய அளவில் கட்டியெழுப்ப தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். ஆரோக்கியமான நாட்டை உருவாக்க சுகாதார அமைச்சின் உயர் அதிகாரி முதல் கீழ்நிலை அதிகாரி வரை அனைவரின் பங்களிப்பும் அவசியம்.

உலகம் முழுவதும் சுகாதார சேவைகள் வளர்ச்சியடையும் போது தொழில்நுட்பம், பயிற்சி மற்றும் கல்வி ஆகியன சகல தரங்களிலும் உள்ள சுகாதார ஊழியர்களுக்கு அவசியமானவையாகும். அது ஒரு பிரிவினருக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படக் கூடாது. அதற்குரிய நடவடிக்கைகளை சுகாதார அமைச்சு முறையாக திட்டமிட்டுள்ள போதிலும், ஒரு சில குழுவினர் அதை பொருட்படுத்தாமல் தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றன.

அரசாங் கம் ஆட்சிக்கு வந்து 4 மாதங் கள் கடந்துள்ள நிலையில் தொடர்ச்சியான தொழிற்சங்க நடவடிக்கை மற்றும் வேலை நிறுத்தங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

கொடுப்பனவுகளை அதிகரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும், கடந்த அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடன் மேற் கொண்ட உடன்படிக்கையின் பிரகாரம் கொடுப்பனவு அதிக ரிப்பை மேற்கொள்ள முடியா மல் போனது.

தற்போதைய அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சு நடத்தி அரசு ஊழியர்களுக்கு 11 ஆயிரம் கோடி ரூபாய் சம்பள உயர்வை வழங்க எதிர்பார்த்துள்ளதுடன், 20 மாதங்களுக்குள் சம்பள உயர்வுக்காக திறைசேரியிலிருந்து 33 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

வரவு - செலவு திட்டத்தில் உள்ள ஒரு சில பிரச்னைகளின் அடிப்படையில் அரசாங்கத்துடன் நெருக்கமாக பணியாற்றிய தொழிற்சங்கங்கள், தற்போது எதிர்க்கட்சிகளை சேர்ந்த அரசியல் பிரதிநிதிகளுடன் இணைந்து பணியாற்றும் தொழிற்சங்கங்களாக மாறியுள்ளன.

இதனால் தற்போதைய சுகாதார அமைப்பு சீர்குலைந்துள்ளது. பணிப்புறக்கணிப்புக்கு அழைப்பு விடுத்த தொழிற்சங்க உறுப்பினர்களும் மருத்துவமனையில் கடமைகளில் ஈடுபட்டுள்ளனர் என்று தகவல் கிடைத்துள்ளது.

கொடுப்பனவு இழப்பை காரணம் காட்டி அரசாங்கத்தின் பாதையை சீர்குலைக்க சதி செய்வார்களாயின் அதை எதிர்கொள்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க அரசாங்கம் தயாராகவே உள்ளது" என்றார்.

# அர்ஜுன் அலோசியஸுக்கு எதிரான வழக்கு ஏப்ரல் 30இல் விசாரணைக்கு!

கொழும்பு, மார்ச் 21

அர்ஜுன் அலோசியஸ் உள்ளிட்ட இரு பிரதிவாதிகளுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை ஏப்ரல் 30 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ள கொழும்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

செய்தித் தாள் அச்சிடுவதற்கான காகி தங்களை வாங்கியதன் மூலம் 12 மில்லியன் ரூபாயை மோசடி செய்ததாகக் கூறி, அர்ஜுன் அலோசியஸ் உள்ளிட்ட இரு பிரதிவாதிகளுக்கு எதிராக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட் டுள்ளது.

இந்நிலையில், கொழும்பு மேலதிக நீதவான் ஹர்ஷன கெகுணாவல முன்னிலையில் இந்த வழக்கு நேற்று முன் தினம் எடுத்துக் கொள் ளப்பட்டது.

அர்ஜுன் அலோசியஸ் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி, தனது கட்சிக்காரருக்கு நேற்று முன் தினம் வரை குற்றப்பத்திரிகைகள் வழங்கப்பட வில்லை எனக்கூறினார். இதன்படி, வழக்கை ஏப்ரல் 30ஆம் திகதி மீண்டும் விசார ணைக்கு எடுத்துக் கொள்ளுமாறு உத்தரவிட்டார். (அ)

# 9,400 சிகரெட்டுகளுடன் ஒருவர் கைது!

கொழும்பு, மார்ச் 21

இறக்குமதி செய்யப்பட்ட 47 அட்டைப் பெட்டிகளில் ஒரு தொகை சிகரெட்டுகளை கடத்த முயன்ற 43 வயது நபர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டார்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில், பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பணியக அதிகாரிகள் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது இந்த கைது இடம்பெற்றுள்ளது.

சந்தேக நபரிடம் இருந்து 9400 இறக்குமதி செய்யப்பட்ட சிகரெட்டுகள் அடங்கிய 47 அட்டைப் பெட்டிகள் கைப்பற்றப்பட்டன.

யட்டியானாவில் வசிக்கும் அந்த நபர் நேற்று முன் தினம் இரவு இலங்கைக்கு வந்திருந்த வேளையில் கைது செய்யப்பட்டார்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டை ‘சுப்பர் முஸ்லிம்’ குழுவினர் சீரழிப்பதற்கு இடமளிக்க முடியாது!

## புதிய உதவி பொலிஸ் அத்தியட்சகர் உறுதி

காரைதீவு, மார்ச்.21

**“சுப்பர் முஸ்லிம்” குழுவினர் நாட்டைச் சீரழிப்பதற்கு ஒரு போதும் இடமளிக்க முடியாது. இந்தக் குழுவை முளையிலேயே கிள்ளியெறிய பொது மக்களின் ஒத்துழைப்பு மிகவும் அவசியம் என்று அக்கரைப்பற்று பொலிஸ் பிராந்திய புதிய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தந்தநாராயண தெரிவித்தார்.**

அம்பாறை மாவட்டம் காரைதீவு பொலிஸ் பிரதேசத்துக்கான மக்கள் பாதுகாப்பு உபதேசக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் புதன்கிழமை காரைதீவு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆர். எஸ். ஜகத் தலைமையில் காரைதீவு பொலிஸ் நிலையத்தில் நடைபெற்றது. இந்தக் குழுக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

சமூகத்தில் அவ்வப்போது எழும் சட்டவிரோத குற்றச் செயல்களைத் தடுக்க பொலிஸார் பொதுமக்கள் நல்லுறவு அவசியம். அதற்கு இவ்வாறான உபதேசக்குழுக்கள் மேலும் வலுச் சேர்க்கும் என்பது எனது நம்பிக்கை.

சுப்பர் முஸ்லிம் குழுவினர் நபிகள் நாயகம் அல்லது குர்ஆன் காட்டிய வழியில் ஒருபோதும் நடப்பதில்லை. மருத்துவர் ரைஸ் தலைமையிலான ஒரு குழுவினர் இளைஞர் குழுவை திரட்டி இந்த சமூக விரோத செயல்பாட்டை முன்னெடுப்பதாக எங்களுக்குத் தெரிய வந்துள்ளது.

சஹ்ரான் சம்பவங்கள் உங்களுக்குத் தெரியும். அதற்கெல்லாம் இனி இடமளிக்க முடியாது.

நாட்டிலே நாங்கள் அனைவரும் ஒரு தாய் பிள்ளைகள் போல் நிம்மதியாக, பாதுகாப்பாக வாழ வேண்டும்.

எனவே, உங்கள் பிரதேசத்தில் வாழும் இளம் சமுதாயத்தினரை நாங்கள் சட்டவிரோத செயல்பாடுகளில் இருந்து பாதுகாக்க வேண்டும். பிரதேசத்தில் ஏதாவது குற்றச்செயல்கள் அல்லது பிழையான செயல்பாடுகள் காணப்பட்டால் உடனடியாக பொலிஸ் பொறுப்பு அதிகாரிக்கு அல்லது எனக்கு அல்லது தகவல் அதிகாரிக்கு தெரிவிக்க வேண்டும்.



போதைப்பொருள் பாவனை, பாலியல் துஷ்பிரயோகங்கள் மற்றும் கடத்தல் தொடர்பில் கடும் நடவடிக்கை எடுக்கப்படும். அதற்கு பொதுமக்களின் உதவி கட்டாயம் தேவை.

சட்டவிரோத செயல்பாடுகளையும் போதைப் பொருள் கடத்தலையும் காரைதீவு பிரதேசத்தில் முற்றாகத் தடை செய்ய வேண்டும்- என்றார். (எ-07)

சிறுவர்களுக்கு எதிரான

# வன்முறைகளை ஒழிக்க விழிப்புணர்வு நிகழ்ச்சி

திருகோணமலை,மார்ச்.21

“குழந்தைகளுக்கு எதிரான வன்முறையை இல்லாதொழிப்பதற்கான எனது முதல்படியை எடுத்து வைக்கின்றேன்“ என்ற விழிப்புணர்வு நிகழ்ச்சி திருகோணமலையில் கடந்த 18 ஆம் திகதி நடைபெற்றது.

திருகோணமலை பேருந்து நிலையம் மற்றும் திருகோணமலை பிரதேச செயலகம் ஆகிய இடங்களில் இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்த நிகழ்வில் இளைஞர்கள், பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக வீதி நாடகம் நடத்தினர். சிறுவர்கள் எதிர்கொள்ளும் வன்முறை, அதன் பாதிப்புகள் மற்றும் சிறுவர்களைப் பாதுகாக்க வேண்டியதன் முக்கியத்துவம் குறித்து பொதுமக்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

நிகழ்வின் முக்கிய நோக்கம் சிறுவர்கள் மீதான வன்முறையின் தீவிரத்தையும், அவர்களுக்கு பாதுகாப்பான சூழலை உருவாக்குவதன் அவசியத்தையும் மக்களுக்கு எடுத்துக் கூறுவதாகும்.

குழந்தைகள் பாதுகாப்பான சூழலில் வளர்வது சமூகத்தின் பொறுப்பாகும் என்று நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் வலியுறுத்தினர். பெற்றோர்கள், சமூகத்தலைவர்கள் மற்றும் பொது மக்கள் அனைவரும் குழந்தைகள் மீதான வன்முறையை ஒழிக்க ஒன்றுபட வேண்டும் எனவும் வலியுறுத்தினர்.

இந்த முயற்சி குழந்தைகளுக்கு பாதுகாப்பான சமூகத்தை உருவாக்கும் முக்கியமான நடவடிக்கையாகும். குழந்தைகள் ஒரு பாதுகாப்பான மற்றும் அன்பான சூழலில் வளர்வதை உறுதி செய்வதே இதன் நோக்கமாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)



# தென்கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

கல்முனை, மார்ச்.21

அம்பாறை மாவட்டம் ஒலுவிலில் உள்ள தென்கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து பல்கலைக்கழகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் .

அரசாங்கம் மாணவர்களின் கற்றல் உபகரணங்களுக்கு விதிக்கப்பட்டிருக்கின்ற வரியை முற்றாக நீக்க வேண்டும் என்றும் பல்கலைக்கழகத்தில் புதிய விடுதிகளை உடனடியாக கட்ட வேண்டும் என்றும் கோரிக்கைகளை வைத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (எ-01)

# கியூ ஆர் மூலமான முறைப்பாட்டை ஆதாரங்களுடன் முன்வையுங்கள்

கல்முனை, மார்ச்.21

நோன்பு கால உணவுப் பாதுகாப்பின் நிமிர்த்தம் அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட உணவகங்களில் நேற்று முன்தினம் புதன்கிழமை திடீர் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

பொதுமக்களிடம் இருந்து கிடைக்கப்பெற்ற கியூ ஆர் மூலமான முறைப்பாடு மற்றும் நேரடியாக வழங்கப்பட்ட முறைப்பாடுகள் என்பனவற்றை அடிப்படையாக கொண்டு அதன் உண்மைத்தன்மையை அறிய சில உணவு கையாளும் நிறுவனங்களில் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீனின் ஆலோசனைக்கமைய சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி ஜே. மதன் தலைமையில் பொதுச் சுகாதார பரிசோதகரால் பரிசோதனைகள் செய்யப்பட்டதுடன் இதன் போது சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாத உணவகங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டது.

அத்துடன் தற்போதைய நோன்பு கால உணவுப் பாதுகாப்பின் நிமிர்த்தம் மக்களின் உணவு பாதுகாப்பை உறுதி செய்வது எமது கடமையும் பொறுப்புமாகும் பொதுமக்கள் தங்கள் முறைப்பாடுகளை உரிய ஆதாரங்களுடன் எமக்கு கியூ ஆர் ஊடாக முன்வைக்கும் பட்சத்தில் விரைவாக நடவடிக்கைகள் மேற்கொள்ள முடியும்- என்றார்.

இதேவேளை, சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பலசரக்கு கடைகள் சிலவும் திடீர் பரிசோதனை செய்யப்பட்டன. இதன் போது மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற வகையில் காணப்பட்ட உழுவா மற்றும் மாசி கருவாடுகள் கைப்பற்றப்பட்டதுடன் அக்கடையின் உரிமையாளருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

மேலும், சந்தேகத்துக்கிடமான வகையில் காணப்படும் கறுப்பு மிளகின் மாதிரி பெறப்பட்டு பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (எ-01)

# கிராம உத்தியோகத்தர்களுக்கு நியமன கடிதம் வழங்கப்பட்டது



கல்முனை, மார்ச்.21

அம்பாறை மாவட்டத்தில் தாமத பட்டியலில் தெரிவான ஆறு புதிய கிராம உத்தியோகத்தர்கள் பிரதேச செயலகங்களுக்கு பயிற்சிக்காக கடந்த 18 ஆம் திகதி முதல் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நியமனக் கடிதங்களை வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்கிரம தலைமையில் மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இதில், மேலதிக அரசாங்க அதிபர் சிவ. ஜெகராஜனும் கலந்து சிறப்பித்தார். (எ-07)

# பல்கலைக்கழக பெண்கள் விடுதி சிற்றுண்டிச்சாலைக்கு அபராதம்!

கல்முனை, மார்ச்.21

தென்கிழக்கு பல்கலைக்கழக பெண்கள் விடுதி சிற்றுண்டிச் சாலைக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

ரமழான் நோன்பு கால உணவுப் பாதுகாப்பின் நிமிர்த்தம் சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய எல்லைக்குட்பட்ட தென்கிழக்கு பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தில் உள்ள பெண்கள் விடுதி சிற்றுண்டிச் சாலை உட்பட சம்மாந்துறை பகுதியில் உள்ள சிற்றுண்டி உற்பத்தி மற்றும் விற்பனை நிலையங்கள், இறைச்சிக் கடைகள் என்பன சுகாதார முறையில் காணப்படவில்லை என சுகாதார வைத்திய அதிகாரிகளுக்கு முறைப்பாடு கிடைக்கப்பெற்றது.

இந்த முறைப்பாட்டுக்கமைய நேற்று முன்தினம் புதன்கிழமை சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி எம். எம். நௌசாத் தலைமையிலான குழுவினரால் திடீர் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது, சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாத பல்கலைக்கழக சிற்றுண்டிச்சாலை உரிமையாளருக்கு எதிராகவும் இரண்டு உணவகங்களுக்கு எதிராகவும் சுகாதார வைத்திய அதிகாரிகளால் சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இந்த நிலையில், 30 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டதுடன் எச்சரிக்கையும் செய்யப்பட்டது.(எ-01)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உக்ரைனுக்கு எதிரான

# போரை முடிவுக்கு கொண்டுவர அமெரிக்கா - ரஷ்யா ஒப்புதல்!

வாஷிங்டன், மார்ச். 21

**உக்ரைன் மீதான போரை முடிவுக்கு கொண்டுவர அமெரிக்கா மற்றும் ரஷ்யா ஒப்புக்கொண்டுள்ளதாக வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.**



ரஷ்யா மற்றும் உக்ரைன் இடையே 3 ஆண்டுகளுக்கு மேலாக போர் நீடித்து வருகிறது. இந்தப் போரால் இரு தரப்பிலும் இலட்சக்கணக்கான மக்கள் உயிரிழந்தனர். போரை முடிவுக்கு கொண்டுவர அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தலைமையிலான அரசு தீவிரம் காட்டி வருகிறது.

இந்த நிலையில், அமெரிக்காவின் வெள்ளை மாளிகையின் ஊடகச் செயலாளர் கரோலின் லெவிட் நேற்றுச் செய்தியாளர்களிடம் கூறுகையில், "அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் மற்றும் ரஷ்ய ஜனாதிபதி புடின் இருவரும் பேச்சு நடத்தினர். அப்போது, உக்ரைன் போரில் அமைதி மற்றும் போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்படுவதற்கான தேவை பற்றி ஆராய்ந்தனர்.

நீண்டகால அமைதியுடன் இந்தப் போர் முடிவுக்கு வருவதற்கான தேவை பற்றி தலைவர்கள் இருவரும் பேசி ஒப்புக் கொண்டதுடன், அமெரிக்கா மற்றும் ரஷ்யா ஆகிய இரு நாடுகளின் இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவதற்கான தேவை பற்றியும் வலியுறுத்தினர். இதேபோன்று, ரஷ்யா மற்றும் உக்ரைன் நாடுகளின் தேவைகள் மற்றும் வேண்டுகோள்களுக்கு ஏற்ப, உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கியுடனும் ட்ரம்ப் பேசினார்.

போரில் செலவிட்ட தொகையை மக்களின் தேவைக்கு சிறப்பாகப் பயன்படுத்தி இருக்கலாம் என்றும் ட்ரம்ப் தொடர்ந்து கூறி வருகிறார்"- என்றார் கரோலின். (எ)

## சுனிதாவை பூமிக்கு அழைத்துவரும் கோரிக்கையை நிராகரித்த பைடன்

எலான் மஸ்க் குற்றச்சாட்டு

வாஷிங்டன், மார்ச்.21

விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம்ஸை முன்பே பூமிக்கு அழைத்துவரும் ஸ்பேஸ் எக்ஸின் கோரிக்கையை அப்போதைய ஜனாதிபதி ஜோ பைடன் நிர்வாகம் நிராகரித்ததாக எலான் மஸ்க் குற்றஞ்சாட்டியுள்ளார்.

விண்வெளி வீரர்கள் பாதுகாப்பாக பூமிக்கு அழைத்துவரப்பட்டதற்கு வாழ்த்து தெரிவித்துள்ள ஸ்பேஸ் எஸ்க் தலைமை நிறைவேற்று அதிகாரி எலான் மஸ்க், இந்தத் திட்டத்துக்கு முன்னுரிமை அளித்ததற்காக ஜனாதிபதி ட்ரம்புக்கு நன்றி தெரிவித்துள்ளார்.

சர்வதேச விண்வெளி நிலையத்தில் ஒன்பது மாதங்களுக்கு மேலாக தங்கியிருந்த சுனிதா வில்லியம்ஸ் மற்றும் புட்ச் வில்மோர் இருவரும் நேற்று முன்தினம் பாதுகாப்பாக பூமிக்குத் திரும்பினர். ஸ்பேஸ் எக்ஸின் டிராகன் விண்கலம் மூலம் இவர்கள் இருவரும் புளோரிடா கடலில் இறங்கினர்.

இதுகுறித்து தனது எக்ஸ் பக்கத்தில் ஸ்பேஸ் எஸ்க் தலைமை செயல் அதிகாரி எலான் மஸ்க் வெளியிட்டுள்ள பதிவில், "மற்றொரு விண்வெளி வீரரை பாதுகாப்பாக பூமிக்கு திரும்ப அழைத்து வந்ததற்கு ஸ்பேஸ் எக்ஸ் மற்றும் நாசா குழுவினருக்கு எனது வாழ்த்துகள். இந்தத் திட்டத்துக்கு முன்னுரிமை அளித்ததற்கு ஜனாதிபதி ட்ரம்புக்கு எனது நன்றிகள்"- என்று தெரிவித்துள்ளார்.

இதனிடையே தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய பேட்டியில், விண்வெளி வீராங்கனை சுனிதாவை முன்பே பூமிக்கு திரும்பி அழைத்து வரும் கோரிக்கையை ஜோ பைடன் நிராகரித்ததாக குற்றஞ்சாட்டினார். (எ)

## போரின் நோக்கம் நிறைவேறும் வரை காஸாமீது தாக்குதல்கள் தொடரும்!

இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு அறிவிப்பு

காஸா, மார்ச்.21

ஹமாஸ் அமைப்பை அழிப்பது உட்பட போரின் நோக்கங்கள் அனைத்தும் நிறைவேறும் வரை இஸ்ரேல் தொடர்ந்து செயல்படும் என்று அந்த நாட்டின் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அறிவித்துள்ளார்.

ஹமாஸூக்கு எதிரான முதல் கட்ட போர் நிறுத்த ஒப்பந்தம் நீடிக்கப்படுவதற்கான சாத்தியம் காணப்படாத சூழலில், காஸா பகுதியில் இஸ்ரேல் தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ளது. இந்த நிலையில், இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் நேற்று முன்தினம் மட்டும் 400இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்.

இதேபோன்று, பலஸ்தீனியர்களுக்கான உணவு, மருந்து மற்றும் எரிபொருள் உள்ளிட்ட பல்வேறு பொருட்களுக்கான விநியோகத்துக்கும் இஸ்ரேல் தடை விதித்துள்ளது. இதனால், 20 இலட்சம் பலஸ்தீனியர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

போர்நிறுத்த ஒப்பந்தத்தின் 2ஆவது கட்டத்துக்கு இஸ்ரேல் முக்கியத்துவம் கொடுக்க போவதில்லை என்றும் தெரியவருகிறது. இதன் தொடர்ச்சியாக, கிழக்கு காஸா பகுதியில் உள்ள மக்களை வெளியேறும்படியும் இஸ்ரேல் உத்தரவிட்டது.

இந்த நிலையில், இஸ்ரேல் பிரதமர் செயலகம் நேற்று வெளியிட்ட அறிக்கையில், இஸ்ரேல் இனி ஹமாஸ் அமைப்புக்கு எதிராக அதிகரிக்கப்பட்ட இராணுவ பலத்துடன் செயல்படும்.

ஹமாஸ் அமைப்பை அழிப்பது மற்றும் பயங்கரவாத குழுவால் சிறை பிடித்து வைக்கப்பட்டுள்ள அனைத்து பணயக் கைதிகளையும் விடுவிப்பது என போரின் நோக்கங்கள் அனைத்தும் நிறைவேறும் வரை இஸ்ரேல் தொடர்ந்து செயல்படும்- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால், ஏற்கனவே ஆயிரக்கணக்கான பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்ட சூழலில், ரமழான் புனித மாதத்தில் போரானது மீண்டும் முழு அளவில் இடம்பெறக் கூடும் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (எ)

# கென்னடி கொலை தொடர்பில் 63,000 பக்க ஆவணம் வெளியீடு

வாஷிங்டன், மார்ச்.21

கென்னடி கொலை தொடர்பில் 63 ஆயிரம் பக்க ஆவணம் வெளியிடப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் 35ஆவது ஜனாதிபதியான ஜோன் எவ் கென்னடி, கடந்த 1963ஆம் ஆண்டு நவம்பர் 22ஆம் திகதி டெக்சாஸ் மாகாணத்தின் டல்லாஸ் நகருக்கு காரில் சென்று கொண்டிருந்தபோது துப்பாக்கியால் சுட்டுக்கொல்லப்பட்டார். துப்பாக்கிச் சூடு நடத்திய லீ ஹார்வி ஓஸ்வால்ட் என்ற இளைஞனை பொலிஸார் உடனடியாகக் கைது செய்தனர். நவம்பர் 24ஆம் திகதி பொலிஸ் காவலில் இருந்த லீ ஹார்வி ஓஸ்வால்ட்டை ஹோட்டல் உரிமையாளரான ஜாக் ரூபி சுட்டுக்கொன்றார்.

கென்னடி கொல்லப்பட்ட ஒரு வாரத்துக்கு பிறகு அப்போதைய ஜனாதிபதி லிண்டன் பி ஜோன்சன் இந்த வழக்கை விசாரிப்பதற்கு ஓர் ஆணையம் அமைத்தார். அந்த ஆணையம் கென்னடி



கொலையில் லீ ஹார்வி ஓஸ்வால்ட் தனியாக செயல்பட்டார் என்றும், வேறு எந்த சதியும் இல்லை என்றும் கூறி விசாரணையை நிறைவு செய்தது. எனினும், கென்னடி கொல்லப்பட்டதற்கான காரணம் என்ன என்பது இன்றுவரை தெரியவில்லை. இதனால், வரலாற்று ஆசிரியர்கள் இதில் தொடர்ந்து சந்தேகங்களை எழுப்பி வருகின்றனர்.

இந்த நிலையில், கென்னடி கொலை தொடர்பான விசாரணை ஆவணங்களை பொது வெளியில் வெளியிட ஜனாதிபதி ட்ரம்ப் உத்தரவிட்டார். அதற்கான நிர்வாக உத்தரவிலும் அவர் கையெழுத்திட்டார். இதையடுத்து கென்னடி கொலை தொடர்பான 63 ஆயிரம் பக்கங்களை கொண்ட ஆவண தொகுப்பு இணையத்தில் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டது.

# அகதிகள் படகு கடலில் கவிழ்ந்ததில் 6 பேர் பலி

ரோம், மார்ச்.21

இத்தாலியில் அகதிகள் படகு கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளான சம்பவத்தில் 6 பேர் உயிரிழந்தனர்.

பொருளாதாரம் மற்றும் வாழ் வாதாரத்தை தேடி ஆபிரிக்கா, எகிப்து, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், ஈராக், சிரியா உட்பட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கானோர் அகதிகளாக கடல் வழியாக சட்டவிரோதமாக ஐரோப்பிய நாடுகளுக்குள் நுழையும் ஆபத்தான பயணம் மேற்கொள்கின்றனர். இந்தப் பயணத்தின் போது விபத்துகள் ஏற்பட்டு உயிரிழப்பு சம்பவங்களும் நிகழ்கின்றன.

இந்த நிலையில், வடக்கு ஆபிரிக்காவில் அமைந்துள்ள துனிசியாவிலிருந்து 60இற்கும் மேற்பட்ட அகதிகள் நேற்று முன்தினம் ஐரோப்பிய நாடான இத்தாலிக்குள் சட்டவிரோதமாக நுழைய முயற்சித்தனர். இதற்காக படகு மூலம் மத்திய தரைக்கடல் வழியாக அகதிகள் பயணித்தனர்.

அப்போது, எதிர்பாராத விதமாக கப்பல் கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் படகில் பயணித்த அனைவரும் கடலில் விழுந்து தத்தளித்தனர்.

இந்த விபத்து குறித்து அறிந்த இத்தாலி கடலோர காவல்படையினர் விரைந்து சென்று கடலில் தத்தளித்த 4 பெண்கள் உட்பட 10 பேரை உயிருடன் மீட்டு லம்பெடுசு தீவுக்கு கொண்டு சென்றனர். இருப்பினும், 6 பேர் நீரில் மூழ்கி உயிரிழந்தனர். மேலும், 40இற்கும் மேற்பட்டோர் மாயமாகினர். அவர்களை தேடும் பணி நடைபெற்று வருகிறது. (எ)

## 60, 000 இராணுவ ஊழியர்கள் அமெரிக்காவில் பணிநீக்கம்

வாஷிங்டன், மார்ச்.21

அமெரிக்காவில் 60 ஆயிரம் இராணுவ ஊழியர்கள் திடீரென பணிநீக்கம் செய்யப்பட்டனர்.

ஜனாதிபதியாக ட்ரம்ப் பதவியேற்றதில் இருந்து அந்த நாட்டில் அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். அரசாங்கத்தின் செலவை குறைக்கும் வகையில் அரசுத்துறைகளில் பணியாளர்கள் குறைப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறார். உலகின் சக்தி வாய்ந்த இராணுவத்தை கொண்ட அமெரிக்காவின் இராணுவத் தலைமை கட்டடமாக பென்டகன் உள்ளது. இந்த இராணுவத் தலைமையிடத்தில் சுமார் ஓர் இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

இந்த நிலையில் பென்டகனில் பணிபுரியும் 60 ஆயிரம் இராணுவ ஊழியர்களை பணிநீக்கம் செய்வதாக ட்ரம்ப் நிர்வாகம் நேற்று அறிவித்துள்ளது. தாமாக முன்வந்து பணியிலிருந்து விலகினால் பல்வேறு சலுகைகள் வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால், 20 ஆயிரம் பேர் தங்களுடைய இராஜினாமா கடிதத்தை கொடுத்துள்ளனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# ஐ.பி.எல். போட்டி நாளை ஆரம்பம் கே. கே. ஆர். - ஆர். சி. பி. மோதல்

சென்னை, மார்ச்.21

இந்தியாவில் நடைபெறும் ரி- 20 கிரிக்கெட் தொடரான ஐ. பி. எல்லின் 18ஆவது சீசன் நாளை 22ஆம் திகதி தொடங்குகிறது. இதில், சென்னை சுப்பர் கிங்ஸ், மும்பை இந்தியன்ஸ், றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு, கொல்கத்தா நைட் ரைட்சர்ஸ், சன்ரைசர்ஸ் ஹைதராபாத், ராஜஸ்தான் றோயல்ஸ், பஞ்சாப் கிங்ஸ், டில்லி கப்பிட்டல்ஸ், குஜராத் டைட்டன்ஸ் மற்றும் லக்னோ சுப்பர் ஜெயண்ட்ஸ் ஆகிய 10 அணிகள் பங்கேற்கின்றன.

கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் நடைபெறும் தொடக்க ஆட்டத்தில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் (கே. கே. ஆர்.) - பெங்களூரு றோயல் சலஞ்சர்ஸ் (ஆர். சி. பி.) அணிகள் மோதுகின்றன.

இந்தத் தொடர் குறித்து பல முன்னாள் வீரர்கள் தங்களது கணிப்பை வெளியிட்டு வருகின்றனர்.

அந்த வரிசையில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் முன்னாள் வீரரான லட்சுமிபதி பாலாஜி இந்தத் தொடரில் பிளே ஒப் சுற்றுக்கு முன்னேற வாய்ப்புள்ள அணிகள் குறித்து தனது கணிப்பை



வெளிப்படுத்தியுள்ளார்.

அவரது கணிப்பின் படி, சென்னை சுப்பர் கிங்ஸ், மும்பை இந்தியன்ஸ், கொல்கத்தா நைட் ரைடர்ஸ் மற்றும் சன்ரைசர்ஸ் ஹைதராபாத் ஆகிய 4 அணிகள் பிளேஒப் சுற்றுக்குத் தகுதி பெறும் என்று கணித்துள்ளார். (எ)




## டெஸ்ட் தொடரில் நிச்சயம் இந்தியாவை வீழ்த்துவோம்

### இங்கிலாந்து வீரர் சவால்

லண்டன், மார்ச்.21

டெஸ்ட் தொடரில் இந்தியாவை நிச்சயம் வீழ்த்துவோம் என்று இங்கிலாந்து வீரர் பென் டக்கெட் சவால் விடுத்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணி அடுத்ததாக இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது. இந்தத் தொடர் எதிர்வரும் ஜூன் மாதம் 20ஆம் திகதி தொடங்கவுள்ளது. அடுத்த உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் அங்கமாக நடைபெறும் இந்தத் தொடரில் வெற்றி பெற இரு அணிகளும் கடுமையாகப் போராடும். அத்துடன் கடந்த இந்திய சுற்றுப்பயணத்தில் அடைந்த தோல்விக்குப் பதிலடி கொடுக்க இங்கிலாந்து ஆயத்தமாகி வருகிறது.

இந்த நிலையில் இந்தியாவை தங்களது சொந்த மண்ணில் வீழ்த்துவோம் என்று இங்கிலாந்து வீரர் பென் டக்கெட் சவால் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில்,"சொந்த மண்ணில் இந்தியா விளையாடுவதை விட வெளிநாடுகளில் விளையாடுவது மிகவும் வித்தியாசமாக இருக்கும். இந்தியா நாங்கள் தோற்கடிக்க வேண்டிய அணி. எங்களால் அவர்களை வீழ்த்த முடியும் என்று நான் நினைக்கின்றேன். இது ஒரு நல்ல தொடராக இருக்கும். பும்ராவின் பந்துவீச்சை கடந்த டெஸ்ட் தொடரில் நான் எதிர்கொண்டுள்ளேன். அவர் எனக்கு எதிராக என்ன செய்வார் என்பது தெரியும்.

அதில் நல்ல விடயம் என்னவென்றால், அவருக்கு என்ன திறமைகள் உள்ளன என்பதும் எனக்குத் தெரியும். எனவே, அதில் ஆச்சரியம் எதுவும் இல்லை. அவரை எதிர்கொள்வது சவாலானதாக இருக்கும். முகமது ஷமியின் திறமைகளும் பும்ராவை போலவே அச்சுறுத்தலாக இருக்கும். ஆனால், அவர்களுடைய தொடக்க கட்ட பந்துவீச்சை என்னால் கடந்து செல்ல முடிந்தால் நிறைய ஓட்டங்கள் அடிக்க முடியும் என்று நான் நினைக்கிறேன்"- என்றார். (எ)

## அசரென்கா அசத்தல்



மியாமி, மார்ச்.21

மியாமி ஓபின் ரென்னிஸ் தொடரில் அசரென்கா 2ஆவது சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளார்.

பல முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ள மியாமி ஓபின் சர்வதேச ரென்னிஸ் தொடர் அமெரிக்காவில் நடைபெற்று வருகிறது. இதில், நேற்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவின் முதல் சுற்று ஆட்டம் ஒன்றில் முன்னணி வீராங்கனையான பெலாரஸின் விக்ரோரியா அசரென்கா, உக்ரைனின் கலினியாவுடன் மோதினார்.

இதில் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய அசரென்கா 6-3 மற்றும் 6-1 என்ற நேர் செட் கணக்கில் எளிதில் வெற்றி பெற்று 2ஆவது சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளார். (எ)

## பும்ரா இல்லாதது சவாலே!


மும்பை, மார்ச்.21

ஐ.பி.எல். ரி - 20 கிரிக்கெட் தொடர் நாளை 22ஆம் திகதி தொடங்குகிறது. இதில், மும்பை இந்தியன்ஸ் அணி தனது முதல் ஆட்டத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியுடன் மோதவுள்ளது. இந்த நிலையில், மும்பை அணியின் நட்சத்திர பந்துவீச்சாளரான ஜஸ்பிரீத் பும்ரா முதற்கட்ட ஆட்டங்களில் விளையாடமாட்டார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த ஜனவரி மாதம் நடைபெற்ற அவுஸ்திரேலிய டெஸ்ட் தொடரின் போது ஜஸ்பிரீத் பும்ராவுக்கு முதுகு பகுதியில் காயம் ஏற்பட்டது. இதற்காக அவர், தற்போது பெங்களூருவில் பி.சி.சி.ஐ. சிறப்பு மையத்தில் சிகிச்சை பெற்று வருகிறார். போட்டிகளில் விளையாடுவதற்கான முழு உடற்தகுதியை பும்ரா இன்னும் அடையவில்லை எனக் கூறப்படுகிறது.

இந்த நிலையில் மும்பையில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் மும்பை இந்தியன்ஸ் அணியின் பயிற்சியாளர் மகேல ஜெயவர்த்தன கூறும்போது, "ஜஸ்பிரீத் பும்ரா தற்போது பி.சி.சி.ஐ. சிறப்பு மையத்தில் உள்ளார். அவர்களின் அறிக்கைக்காக நாங்கள் காத்திருக்கிறோம். தற்போதைய நிலையில் நன்றாகவே சென்று கொண்டிருக்கிறது, தினசரி அடிப்படையில் முன்னேற்றம் உள்ளது. பும்ரா நல்ல மனநிலையில் இருக்கிறார், அவர் இல்லாதது ஒரு சவாலாகவே இருக்கும். ஏனெனில் அவர், உலகின் சிறந்த பந்துவீச்சாளர்"- என்றார்.

மும்பை அணியின் தலைவர் ஹர்திக் பாண்டியா கூறும்போது,"என்னுடன் ரோஹித் சர்மா, சூர்யா குமார் யாதவ், ஜஸ்பிரீத் பும்ரா ஆகிய மூன்று தலைவர்கள் இணைந்து விளையாடுவது எனது அதிர்ஷ்டம். அவர்கள் எப்போதும் என் தோளைச் சுற்றி ஒரு கையை வைப்பார்கள். எனக்கு ஏதேனும் உதவி தேவைப்படும்போது அங்கே இருப்பார்கள்"- என்றார். (எ)




## இந்திய அணிக்கு ரூ. 199 கோடி பரிசு

மும்பை, மார்ச்.21

சம்பியன்ஸ் கிண்ணத்தை வென்ற இந்திய அணிக்கு பி. சி. சி. ஐ. பரிசுத்தொகை அறிவித்துள்ளது.

இதன்படி, இலங்கை மதிப்பில் 199 கோடி ரூபாயை பரிசுத்தொகையாக பி.சி.சி.ஐ. அறிவித்துள்ளது. இது இந்தத் தொடரில் இந்திய அணியில் இடம்பெற்றிருந்த வீரர்கள், பயிற்சியாளர்கள், ஊழியர்கள் மற்றும் தெரிவுக்குழு உறுப்பினர்களை கௌரவிக்கும் விதமாக வழங்கப்பட்டுள்ளது. அண்மையில் முடிவடைந்த 9ஆவது ஐ.சி.சி. சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் டுபாயில் அரங்கேறிய இறுதிப்போட்டியில் இந்தியா - நியூசிலாந்து அணிகள் பலப்பரீட்சை நடத்தின. இதில் வெற்றி பெற்ற இந்தியா சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்தது. (எ)

# வருண் மற்றும் அபிஷேக் 2ஆவது இடத்தில் நீடிப்பு

டுபாய், மார்ச்.21

ரி - 20 தரவரிசையில் வருண் சக்கரவர்த்தி மற்றும் அபிஷேக் சர்மா ஆகியோர் 2ஆவது இடத்தில் நீடிக்கின்றனர்.

சர்வதேச ரி - 20 கிரிக்கெட் துடுப்பாட்ட வீரர்கள் மற்றும் பந்துவீச்சாளர்களுக்கான தரவரிசை பட்டியலை ஐ.சி.சி. வெளியிட்டுள்ளது. இதில், இந்தியாவின் தொடக்க துடுப்பாட்ட வீரரான அபிஷேக் சர்மா 829 புள்ளிகளுடன் 2ஆவது இடத்தை தக்கவைத்துக் கொண்டுள்ளார். அவுஸ்திரேலியாவின் ட்ராவிஸ் ஹெட் 856 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளார். இங்கிலாந்தின் பில் சால்ட் 815 புள்ளிகளுடன் 3ஆவது இடம் வகிக்கிறார். இந்தியாவின் திலக் வர்மா (804), சூர்யகுமார் யாதவ் (739)ஆகியோர் முறையே 4 மற்றும் 5ஆவது இடங்களில் உள்ளனர்.

சகல துறை வீரர்களுக்கான தரவரிசையில் ஹர்திக் பாண்டியா 252 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளார். நேபாளத்தின் திபேந்திரா சிங் ஐரீ 233 புள்ளிகளுடன் 2ஆவது இடத்திலும், அவுஸ்திரேலியாவின் மார்கஸ் ஸ்ரொயினிஸ் 210 புள்ளிகளுடன் 3ஆவது இடத்திலும் உள்ளனர்.

பந்துவீச்சாளர்களுக்கான தரவரிசையில் மேற்கு இந்திய தீவுகளின் அகீல் ஹோஸைன் 707 புள்ளிகளுடன்



முதலிடம் வகிக்கிறார். இந்தியாவின் வருண் சக்கரவர்த்தி 706 புள்ளிகளுடன் 2ஆவது இடத்தில் தொடர்கிறார்.

இங்கிலாந்தின் ஆதில் ரஷீத் (705), இலங்கையின் வனிந்து ஹசரங்க (700), அவுஸ்திரே லியாவின் அடம் ஸாம்பா (694) ஆகியோர் முறையே 3 முதல் 5ஆவது இடங்களில் உள்ளனர். மற்ற இந்திய வீரர்களில் ரவி பிஷ்னோய் (674) 6ஆவது இடத்திலும், இடது கை வேகப்பந்து வீச்சாளரான அர்ஷ்தீப் சிங் (653) புள்ளிகளுடன் 9ஆவது இடத்திலும் உள்ளனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய...

காங்கிரஸ் கட்சியின் சைக்கிள் சின்னத்தில் எதிர்வரும் மே 6ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வடக்கு - கிழக்கு மாகாணங்கள் முழுவதும் போட்டியிடவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## மிருசுவில்...

பணிப்பாளர் பாக்கியசோதி சரவணமுத்து தாக்கல் செய்திருந்த வழக்கின் விசாரணை முடிவடைந்த நிலையிலேயே உயர்நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

**சம்பவ பின்னணி**

போர் காரணமாக தென்மராட்சியிலிருந்து மக்கள் இடம்பெயர்ந்திருந்தனர். இவ்வாறு மிருசுவிலில் இருந்து இடம்பெயர்ந்த 9 பேர், 2000 டிசெம்பர் 19ஆம் நாள் தமது வீடுகளை பார்ப்பதற்காக சொந்த இடத்துக்கு திரும்பினர்.

இவ்வாறு சென்றவர்கள் இளம் பெண்ணின் சடலம் ஒன்று அரைகுறையாக புதைக்கப்பட்டமையை கண்டனர். இதைத் தொடர்ந்து, அவர்கள் இராணுவத்தினரால் பிடிக்கப்பட்டவர்களில் 8 பேர் கடுமையாக சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்டனர். ஒருவர் மட்டும் காயங்களுடன் தப்பித்தார். கொல்லப்பட்டவர்களின் சடலங்கள் பொதுமகன் ஒருவரின் மலசலகூட குழிக்குள் போடப்பட்டன. கொல்லப்பட்டவர்களில் 5 வயது சிறுவனும் அடங்குவார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## உடன்படிக்கையில்...

மற்றும் அடிப்படையற்றவை.

இலங்கையுடனான உடன்படிக்கையில் விதிமுறைகளுக்கு நாங்கள் முழுமையாக உறுதி பூண்டுள்ளோம். அதானி கிறீன் எனர்ஜி நிறுவனத்தின்முதலீட்டுத் திட்டங்கள் மற்றும் திட்ட அளவுருக்கள் மாறவில்லை.

முன்மொழியப்பட்ட காற்றாலை கருதிட்டத்திலிருந்து அதானி குழுமம் விலகியிருந்தாலும் இலங்கை எதிர்வரும் காலத்தில் திட்டத்தை நடைமுறைப் படுத்த விரும்பினால் நாங்கள் தயாராக இருப்போம் - என்றும் அந்த நிறுவனம் கூறியுள்ளது. (ஐ)

## வேட்புமனு...

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் 7 வேட்புமனுக்கள் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நிராகரிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. இது தொடர்பில் அவர் நேற்று நடத்திய செய்தி யாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்,

எமது வேட்பாளர்களான இளைஞர்களின் பிறப்பு சான்றிதழ் இங்குள்ள பதிவாளரால் உறுதிப்படுத்தி வழங்கப்பட்டது. அதன் போட்டோ பிரதியே வழங்கப்பட்டது. அதில் பதிவாளரின் உறுதிப்படுத்தல் இருந்தும்கூட வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. பிறப்பு சான்றிதழுடன் தேசிய அடையாள அட்டையின் பிரதியும் வழங்கியுள்ளது. அத்துடன், இந்த ஆவணங்கள் சமாதான நீதிவானால் ஒப்பமிட்டே வழங்கப்பட்டுள்ளன. ஆகவே, இவற்றை நிராகரிக்க இடமில்லை. புதிய சுற்றுநிருபத்தின்படியே இது நிராகரிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. இந்த நிலையில் 5 நாட்களுக்கு (கடந்த 15ஆம் திகதி) முன்னர் வெளியான சுற்றுநிருபத்தின்படி எவ்வாறு வேட்புமனுக்களை நிராகரிக்க முடியும்.

கிளிநொச்சியிலும் வன்னியிலும்கூட எமது வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. வடக்கு, கிழக்கு கட்சிகளை புறமொதுக்கி தேசிய மக்கள் சக்தி மற்றும் தங்களுக்கு தேவைப்பட்ட கட்சிகளை மட்டுமே வெல்லவைக்கும் நோக்கமே இது. எனவே, எமது வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டமைக்கு எதிராக நாம் உயர்நீதிமன்றத்தை நாடவுள்ளோம் - என்றார். (ஐ)

## தேசிய மக்கள்...

வேட்புமனுக்களை தாக்கல் செய்தது.

வேட்புமனு தாக்கலின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட அமைச்சர் சந்திரசேகர்,

கடந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலில், தேசிய மக்கள் சக்தி பெற்ற வெற்றி மகத்தானது. இதே போன்ற ஒரு வெற்றியை, இந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலிலும் பெறுவதற்கு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம்.

நாங்கள் ஆட்சிக்கு வந்து மூன்று மாதங்கள் கடந்துள்ளன. இந்த காலப் பகுதியில் பல மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளோம். இந்த முறை வரவு - செலவு திட்டத்தின் மூலம் கிராமங்களுக்கும், யாழ். மாவட்டத்துக்கும் அதிக நிதி ஒதுக்கீடு செய்துள்ளோம்.

மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளிலிருந்து கடுகளவேணும் மாற மாட்டோம். யாழ். மாவட்டத்தில் இருக்கின்ற எல்லா சபைகளையும் கைப்பற்றி, அவற்றின் மூலம் சமூக மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். எனவே, யாழ். மாவட்ட மக்கள் சிந்தித்து திசைக்காட்டிக்கு வாக்களிக்க வேண்டும் - என்றார். (ஐ)

## கட்சிகள்...

114 வேட்புமனுக்களும், சுயேச்சைக் குழுக்களின் சார்பில் 10 வேட்புமனுக்களும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன என்று யாழ்ப்பாணம் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் ம. பிரதீபன் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி தேர்தலில் வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளபட்டமை தொடர்பில் அவர் நேற்றிரவு நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

மேலும், யாழ்ப்பாணம் மாநகர சபையில் தமிழ் மக்கள் கூட்டணி, ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி, ஈரோஸ் ஜனநாயக முன்னணி ஆகிய கட்சிகளின் வேட்புமனுக்களும் பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா சார்பான ந. கௌசல்யாவின் சுயேச்சை குழு உட்பட 2 சுயேச்சை குழுக்களின் வேட்புமனுக்களும் நிராகரிக்கப்பட்டன.

பருத்தித்துறை நகர சபை, வேலணை பிரதேச சபைகளுக்காக தாக்கல் செய்யப்பட்ட சகல வேட்புமனுக்களும் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

சாவகச்சேரி நகர சபையில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியினதும் இரு சுயேச்சை குழுக்களினதும் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டன.

காரைநகர் பிரதேச சபை, ஊர்காவற்துறை பிரதேச சபை, நெடுந்தீவு பிரதேச சபைகளில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் வேட்புமனு மட்டும் நிராகரிக்கப்பட்டது. வலி. வடக்கு பிரதேச சபை, வலி. மேற்கு பிரதேச சபையில் தலா ஒரு சுயேச்சை குழுவின் வேட்புமனு நிராகரிக்கப்பட்டது.

வலி. தென்மேற்கு பிரதேச சபையில் சிறீ லங்கா கம்யூனிஸ்ட் கட்சியினதும் வலி. தெற்கு பிரதேச சபையில் தமிழ் மக்கள் கூட்டணி, ஐக்கிய தேசிய கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி கட்சிகளினதும் வலி. கிழக்கு பிரதேச சபையில் ஜன ாயக தமிழ்த் தேசியக் கூட்டணி, மக்கள் போராட்ட முன்னணி, ஐக்கிய மக்கள் சக்தி கட்சிகளினதும் வடமராட்சி தென்மேற்கு பிரதேச சபையில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி, பொதுஜன ஐக்கிய முன்னணி மற்றும் இரு சுயேச்சை குழுக்களினதும் பருத்தித்துறை பிரதேச சபை அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், தமிழ் மக்கள் கூட்டணி, பொதுஜன ஐக்கிய முன்னணி, ஒரு சுயேச்சை குழுவினதும் நல்லூர் பிரதேச சபை அகில் இலங்கை தமிழ் காங்கிரஸ், ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி கட்சிகளினதும் ஒரு சுயேச்சை குழுவினதும் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# தமிழ் அரசுக் கட்சிக்கு எதிரான சிவமோகனின் வழக்கு தள்ளுபடி!

யாழ்ப்பாணம், மார்ச் 21

கட்சியின் உறுப்புரிமை இடைநிறுத்தி இலங்கைத் தமிழ் அரசு கட்சியின் மத்திய குழு எடுத்த தீர்மானத்துக்கு எதிராக இடைக்கால கட்டாணை ஒன்று வழங்கும்படி கோரி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் எஸ். சிவமோகன் தாக்கல் செய்த மனுவை யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம் நேற்று தள்ளுபடி செய்தது.

நீதிபதி சதீஸ்கரன் இந்தத் தீர்ப்பை நேற்று வியாழக்கிழமை வழங்கினார். எனினும், கட்சி உறுப்புரிமையிலிருந்து இடைநிறுத்தப்பட்டமைக்கு எதிராக சிவமோகன் தாக்கல் செய்த மூல வழக்கு தொடர்ந்தும் விசாரணையில் இருக்கும். இடைக்காலத் தடை விதிக்கும் கோரிக்கையே இப்போது நிராகரிக்கப்பட்டு இருக்கின்றது.

இந்த வழக்கின் முதல் மூன்று எதிராளிகளான கட்சியின் பதில் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம் இதுவரை காலமும் செயலாளராகக் கடமையாற்றிய மருத்துவர் ப. சத்தியலிங்கம் எம்.பி., கட்சியின் நிர்வாகச் செயலாளர் எக்ஸ். குலநாயகம் ஆகியோர் சார்பில் இவ்வழக்கில் ஜனாதிபதி சட்டத்தரணி எம். ஏ. சுமந்திரன் முன்னிலையாகி வாதிட்டிருந்தார்.

நான்காவது எதிராளியாக இவ்வழக்கில் குறிப்பிடப்பட்டிருந்த சி. சிறீதரன் எம்.பி. வழக்காளியான மருத்துவர் சிவமோகனுக்குச் சார்பான நிலைப்பாட்டை எடுத்து பதில் மனு தாக்கல் செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. வழக்காளி சார்பில் சட்டத்தரணி குருபரன் முன்னிலையாகி வாதிட்டு இருந்தார். (ஐ- 02)

# படை விட்டோடிகளை கைது செய்யும் முடிவு நியாயமற்றது

## நாமல் ராஜபக்ஷ சொல்கிறார்

கொழும்பு, மார்ச் 21

பாதாள உலகக் குழுவுடன் தொடர்பு என்ற அடிப்படையில் படைகளிலிருந்து தப்பியோடியவர்களை கைது செய்யும் அரசாங்கத்தின் முடிவு நியாயமற்றது - இவ்வாறு சிறீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் பாராளுமன்றத்தில் உரையாற்றிய அவர்,



படைகளிலிருந்து தப்பியோடிய அனைவரையும் பாதாள உலகத்துடன் தொடர்பு கொண்டதாகக் கருதி, அவர்களை ஒட்டுமொத்தமாகக் கைது செய்வது நியாயமானதல்ல. படையினரில் சிலர் தவறான செயல்களை செய்யலாம். எனினும், அத்தகையவர்களுக்கு எதிராக சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் எந்தப் பிரச்னையும் இல்லை.

படைகளிலிருந்து தப்பியோடியவர்கள் குறித்து அரசாங்கம் ஒரு பரந்த விவாதத்தை நடத்த வேண்டும் என்றும், அவர்கள் சட்டபூர்வமாக வெளியேற அனுமதி வழங்கப்படவேண்டும். அத்தகைய நபர்கள் மீது அரசாங்கம் ஒரு கண்காணிப்பு செயல்முறையை வகுக்க முடியும் - என்றார்.(ஐ)

## பெண் ஒருவரை துன்புறுத்திய சம்பவம்

# ஜனக ரத்நாயக்கவை நீதிமன்றில் முன்னிலையாகுமாறு அறிவிப்பு!

கொழும்பு, மார்ச் 21

தனது செயலாளராகப் பணியாற்றிய பெண்ணை பாலியல் ரீதியாக துன்புறுத்தி அது தொடர்பான காணொளியை பதிவேற்றுவதாக அச்சுறுத்திய சம்பவத்தில் பொது பயன்பாடுகள் ஆணைக் குழுவின் முன்னாள் தலைவர் ஜனக ரத்நாயக்கவை சந்தேக நபராக பெயரிடவிருப்பதாக குற்றப்புலனாய்வு திணைக்களம் நீதிமன்றத்துக்கு அறியப்படுத்தியுள்ளது.

குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் கணினி பிரிவு இந்த அறிவிப்பை கொழும்பு - கோட்டை நீதவான் நிலுபுலீ லங்காபுரவிடம் முன்வைத்துள்ளது.

இதற்கமைய, அடுத்த மாதம் 2 ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறு பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் ஜனக ரத்நாயக்கவுக்கு நீதிமன்றம் அறிவித்தல் விடுத்துள்ளது. (அ)

## எமது...

வெளியிட்ட போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், யாழ்ப்பாணத்தில் உள்ள 17 உள்ளூராட்சி சபைகளில் 11 சபைகளுக்கே வேட்பு மனுக்களை கையளித்துள்ளோம். தீவகம் உட்பட ஆறு சபைகளில் போட்டியிடவில்லை. யாழ். மாநகர சபை வேட்பு மனு சிலவேளைகளில் நிராகரிக்கப்படலாம். (இந்த வேட்புமனு நிராகரிக்கப்பட்டது) அவ்வாறு நிராகரித்தால் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் கட்சிக்கே எமது ஆதரவை வழங்குவோம். அவர்களுக்கே வாக்களிக்குமாறு கோருவோம் - என்றார். (ஐ)

## தென்னக்கோனுக்கு...

ஒன்றின் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை கைதுசெய்ய நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இதையடுத்து தலைமறைவான தென்னக்கோன் 20 நாட்களின் பின்னர் நேற்று முன்தினம் மாத்தறை நீதிவான் நீதிமன்றத்தில் சரணடைந்தார். இதை யடுத்து, அவர் நேற்று வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

இந்த நிலையில், நேற்று அவர் மாத்தறை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார். அவரை எதிர்வரும் ஏப்ரல் 3ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார். (ஐ)

## முள்ளிவாய்க்கால்...

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் வேட்புமனுக்களை தாக்கல் செய்த பின்னர் கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

# சர்வதேச நாணய நிதியத்தின் கைப்பாவையாக அநுர அரசு!

## சஜித் பிரேமதாஸ சாடல்



கொழும்பு, மார்ச் 21

**கடந்த தேர்தல் காலத்தின் போது பேரின மற்றும் நுண் பொருளாதாரத்தை எவ்வாறு கையாள்வது என்பது குறித்தும், அது தொடர்பாக பல தொடர்வாக் குறுதிகளையும் சமூக ஒப்பந்தத்தின் மூலம் வளமான நாடு, அழகிய வாழ்க்கை என்ற கொள்கைப் பிரகடனத்தை முன்வைத்த போதிலும், அந்த சமூக ஒப்பந்த கொள்கைத் திட்டம் அப்பட்டமாக மீறப்பட்டுள்ளது. கொள்கைப் பிரகடனத்தின் மூலம் பல வாக்குறுதிகள் வழங்கப்பட்டாலும் இன்றளவில் அவை மீறப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.**

தற்போதைய அரசாங்கம் தேர்தல் காலத்தில் புதிய கடனை உறுதிப்படுத்தும் உடன்படிக்கைக்கு செல்வதாக கூறிய போதிலும், அது கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டாலும், கடைசியில் அவ்வாறான புதிய உடன்படிக்கைக்கு செல்லாமல், கடந்த அரசாங்கம் உருவாக்கிய நாட்டையும் நாட்டு மக்களையும் மிகவும் அடக்குமுறைக்கு உள்ளாக்கும், சாதாரண மக்களின் தோள் மீது சுமையைச் சுமத்தி மக்களை பழிவாங்கும் ஐஎம்எப் உடன்படிக்கைக்கும், இரு தரப்பு கடன் உடன்படிக்கைக்கும், சர்வதேச பிணைமுறி தாரர்களுடன் உடன்படிக்கைக்கும் சென்றதாகவும், நாணய நிதியம் கூறுகின்ற வசனங்களுக்கு நடனமாடு கின்ற, நாணய நிதியத்தின் கைப்பாவையாக இந்த அரசாங்கம் உருவாகியிருப்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

வரவு - செலவுத்திட்ட பொருளாதார அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் நேற்று கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பொருளாதார வளர்ச்சி 5 வீத இலக்கை நோக்கிச் செல்ல வேண்டும். 2028 ஆம் ஆண்டளவில் நாடு கடனைத் திருப்பிச் செலுத்தும் நிலைக்கு வரும் போது இந்த பொருளாதார வளர்ச்சி வேகத்தை நிறைவு செய்ய வேண்டும். இதனை 5 வீதம் அல்ல அதனையும் விட அதிகரிக்க வேண்டும் என பிரார்த்தனை செய்கின்ற போதிலும், இந்த பொருளாதார வளர்ச்சி வேகத்திற்கூடாக நாட்டின் மொத்தத் தேசிய உற்பத்தியை மேம்படுத்துகின்ற அரசாங்கத்தின் வேலைத்திட்டங்கள் போதுமானதாக இல்லையென்றும் எதிர்கட்சித் தலைவர் அவர்கள் சுட்டிக்காட்டினார்.

இந்த அனைத்து அம்சங்களையும் நாம் பார்க்கும் போது,நாணய நிதியம் என்ன சொன்னாலும் ஏற்றுக்கொள்ளும் மக்களின் ஆணையை அப்பட்டமாக மீறும் ஒரு அரசாங்கம் நாட்டில் இருப்பதாகவும், ஏற்றுமதி மேம்பாடு இன்றியமையாத விடயம் என்றும், அதன் மூலம் தொழில்களை உருவாக்குவதன் மூலம் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதன் மூலம் அதன் பலன்களை நாடு பல வழிகளில் பெற்றுக்கொள்ளும் என்றும், அதற்கான வேலைத்திட்டம் அரசாங்கத்திடம் இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

எமது நாட்டுக்கு அதிக சதவீத முதலீடும், முதலீட்டு ஊக்குவிப்புத் திட்டமும் தேவை. அரசாங்கத்திற்கு அப்படியொரு விடயம் இருக்குமானால் அதனை முன்வைக்குமாறும், வியட்நாம், இந்தோனேசியா, மலேசியா, இந்தியா போன்ற நாடுகளுடன் போட்டிபோட்டு முந்திச் சென்று அதிக முதலீடுகளை நம் நாட்டிற்கு கொண்டு வரக்கூடிய வேலைத்திட்டம் ஒன்று இருக்க வேண்டும் என்ற போதிலும் அரசாங்கத்திடம் அவ்வாறான வேலைத்திட்டம் இல்லை என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார். (அ)

## போதைப்பொருள் வாங்குவதற்கு பணம் கொடுக்க மறுத்தார் தாய்!

### அடித்தே கொன்றார் மகன்

கொழும்பு, மார்ச் 21

கொழும்பு, தெமட்டகொடை, ஆராமய பிரதேசத்தில் போதைப்பொருள் வாங்குவதற்கு பணம் கொடுக்க மறுத்த தாயை அடித்து கொலை செய்த மகன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தெமட்டகொடை, ஆராமய பிரதேசத்தைச் சேர்ந்த 68 வயதுடைய தாயொருவரே கொலை செய்யப் பட்டுள்ளார்.

சம்பவத்தன்று, சந்தேக நபரான மகன் போதைப்பொருள் வாங்குவதற்கு பணம் கேட்டு தனது தாயுடன் தகராறில் ஈடுபட்டுள்ளார்.

தகராறின்போது சந்தேக நபரான மகன் தனது தாயை அடித்து கொலை செய்துள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

மகன் போதைப்பொருளுக்கு அடிமையானர் என பொலிஸ் விசாரணையில் மேலும் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து 46 வயதுடைய சந்தேக நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

சம்பவத்துடன் தொடர்புடைய நபர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டார். (அ)

## பட்டலந்த ஆணைக்குழு அறிக்கையின் ஒவ்வொரு பக்கத்தையும் படியுங்கள்!

### கோருகிறார் வஜிர அபேவர்தன



கொழும்பு, மார்ச் 21

படலந்த ஆணைக் குழு அறிக்கையின் ஒவ்வொரு பக்கத்தையும் படிக்குமாறு அனைத்து நாட்டு மக்களையும் அழைப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

காலி மாவட்டத்தில் இந்த ஆண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பா ளர்களின் வேட்புமனுக் களை கையளித்த பின்னர், ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்த ஆண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக நாட்டின் ஒரு சில இடங்களைத் தவிர, அனைத்து உள்ளூராட்சி மன்றங்களுக்கும் ஐக்கிய தேசியக் கட்சி வேட்புமனுக்களை சமர்ப்பித்துள்ளதாகவும், ஐக்கிய தேசியக் கட்சி வேட்புமனுக்களை சமர்ப்பிக்காத சில இடங்களுக்கு சுயேச்சைக் குழுக்களாகப் போட்டியிட வேட்புமனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

காலி மாவட்டத்தில் உள்ள 19 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கும் யானை சின்னத்தின் கீழ் போட்டியிட வேட்புமனுக்கள் சமர்ப்பிக்கப்பட் டுள்ளதாகவும் வஜிர அபேவர்தன தெரிவித்தார். (அ)

## பால் தேநீரின் விலை 10 ரூபாவால் உயர்வு!

கொழும்பு, மார்ச் 21

இறக்குமதி செய்யப்படும் பால் மாவின் விலை அதிகரிப்பால் , பால் தேநீரின் விலையையும் அதிகரிக்க வேண்டியிருக்கும் என்று அகில இலங்கை உணவகம் மற்றும் சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் ஹர்ஷன ருக்ஷான் தெரிவித்தார்.

அதன்படி, ஏப்ரல் முதலாம் திகதி முதல் ஒரு கோப்பை தேநீரின் விலையை 10 ரூபாவால் அதிகரிக்கத் தீர்மானித்துள்ளதாக அவர் கூறினார். இறக்குமதி செய்யப்படும் 400 கிராம் பால் மாவின் விலை 50 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு , அதன் புதிய விலை 1,100 ரூபாய் ஆகும். (அ)

## இலங்கையில் கடத்திச் செல்லப்பட்ட உயிரினங்கள் மதுரையில் பறிமுதல்!

சென்னை, மார்ச் 21

இலங்கையிலிருந்து மதுரைக்கு விமானம் மூலம் கடத்திச் செல்லப்பட்ட அரியவகை வன உயிரினங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. வேலூரைச் சேர்ந்த பயணி ஒருவரின் உடைமைகளைச் சோதனை செய்த போதே இந்த அரிய வகை உயிரினங்கள் மீட்கப்பட்டுள் ளன.

52 ஆமைகள், 4 பல்லிகள், 8 குட்டி பாம்புகள் என மொத்தம் 64 வன உயிரினங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. கடத்தி வரப்பட்ட உயிரினங்களை நீதிமன்றில் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ)

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியில் தேர்தலுக்காக நாம் இணையவில்லை!

### எம்.கே.சிவாஜிலிங்கம் விளக்கம்




கொழும்பு, மார்ச் 21

தேர்தலை இலக்காகக் கொண்டு தங்களது தரப்பு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியுடன் இணைய வில்லை எனத் தமிழ்த் தேசிய கட்சியின் செயலாளர் எம்.கே. சிவாஜிலிங்கம் குறிப்பிட்டார்.

தற்போது அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய தேவையுள்ளதின் காரணமாகவே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியுடன் இணைந்ததாக எம். கே. சிவாஜிலிங்கம் சுட்டிக் காட்டினார்.

எதிர்வரும் உள்ளூராட்சிமன்ற தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்புமனுக்களைத் தாக்கல் செய்ததன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைத்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். (அ)

## ஐ.தே.க. மேயர் வேட்பாளர் அடுத்த வாரம் அறிவிப்பு!



கொழும்பு, மார்ச் 21

உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கான தமது கொழும்பு மேயர் வேட்பாளரை அடுத்த வாரம் அறிவிக்கவுள் ளதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

தமது செயற்குழு அடுத்த வாரம் மேயர் வேட்பாளர்களை தீர்மானிக்கும் என ஐக்கிய தேசியக் கட்சியின் ஏற்பாட்டாளர் சாகல ரத்நாயக்க ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் - ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து போட்டியிடவிருந்த தீர்மானம் தோல்வியடைந்துள்ளது.

இந்நிலையில், 13 உள்ளூராட்சி அமைப்புகளிலும் யானைச் சின்னத்தில் போட்டியிட தீர்மானித்துள்ளோம் - என்றார். (அ)

## யாழில் காணாமல்போன மீனவர்கள் இருவர் தமிழக கடலோர காவல்துறையினரால் மீட்பு!

சென்னை, மார்ச் 21

யாழ்ப்பாணத்திலிருந்து கடற்றொழிலுக்குச் சென்ற நிலையில் காணாமல் போன இருவர் தமிழக கடலோர காவல்துறையினரால் மீட்கப்பட்டுள்ளனர்.

யாழ். குருநகர் பகுதியைச் சேர்ந்த 46 வயதுடைய விமலேந்திரன் ஞானராஜ், 54 வயதுடைய பூலோக தாசன் ஆகியோரே கடந்த 15 ஆம் திகதி ஊர்காவற் துறையிலிருந்து கடற்றொழிலுக்குச் சென்ற நிலையில் காணாமல் போயிருந்தனர்.

குறித்த மீனவர்களைத் தேடும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில், இராமநாதபுரம் தொண்டி மீன்பிடித்துறைமுகத்துக்கு சற்று தொலைவில் படகொன்று தத்தளித்துக் கொண்டிருந்ததை அவதானித்த தமிழக கடலோர காவல்துறையினர் குறித்த இரு மீனவர்களையும் மீட்டுள்ளனர்.

மேலும், இரு மீனவர்களையும் மீட்ட கடற்பகுதியில் மூட்டை ஒன்றிலிருந்து கஞ்சாப் பொட்டலங்களும் கண்டெடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

அந்த வகையில், அவர்கள் இருவரும் கடத்தல் நோக்கத்துடன் தமிழக கடற்பரப்பினுள் நுழைந்தார்களா எனும் சந்தேகத்துடன் தமிழக காவல்துறையினர் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 21.03.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org